# தமிழரசு

1-1-1993 ரூ.1



பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR/2687/MS/92/CHARI

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


வீரத்துறவி விவேகானந்தர்
—மாண்புமிகு முதல்வர் உரை ... 2

புரட்சித்தலைவர் இன்றும் வாழ்கிறார்... என்றும் வாழ்வார்!
—மாண்புமிகு முதல்வர் உரை ... 5

புவியாண்ட புரட்சித் தலைவருக்குப் புகழ் மண்டபம் ... 6

நேரு விளையாட்டு அரங்கை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார் ... 8

தமிழ் இசைச் சங்க இசை விழா ... 10

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். வாழ்க்கைக் குறிப்பு ... 11

மூளைக் காய்ச்சலைத் தடுப்பது எப்படி? ... 15

தொட்டில் குழந்தைகளை வளர்க்க ஐந்து பெண்கள் முன்வந்தனர் ... 17

விவசாயிகளுக்கு இலவசமாக இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன ... 18

வலிப்பு நோய் - சில செய்திகள் ... 19

கலை உலகின் வழிகாட்டி
—பேரறிஞர் அண்ணா ... 24

நீங்க நல்லா இருக்கணும் ... 27

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி ... 29

எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி ... 31

நலிந்தோர் நலம்பெற நல்வாழ்வுத் திட்டங்கள் ... 33

ஆசிய பசிபிக் நாடுகள் மாநாடு சிறுநீரகச் சிகிச்சையில் தமிழகத்திற்கு முதலிடம்! ... 37

சிவகங்கை கிராஃபைட் ... 39

பெரியார் மாவட்டத்தில் அரசு ஆற்றிவரும் நலத்திட்டப் பணிகள் ... 43

உழவர் உயர்வுக்கு வேளாண்மை பொறியியல் துறை ... 46


## வளர்ச்சிப் பாதையில் வெற்றிநடை போடுவோம்!



### முதல்வர் அவர்களின் புத்தாண்டுச் செய்தி

மலர்கின்ற புத்தாண்டில் மன நிறைவையும் மகிழ்ச்சிப்பெருக்கையும் அடைய அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் நிலையான பெருமையினைக் காப்பதோடு, ஐந்தரைக் கோடி தமிழ் மக்களின் நலன்களைப் பேணிக் காப்பதையும் தனது உயரிய இலட்சியங்களாகக் கொண்டு இயங்கி வரும் தமிழக அரசு, இப்புத்தாண்டில் மேலும் பல புதிய திட்டங்களை வழங்கி, தமிழகத்தின் அனைத்துத் துறைகளின் சீரிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து சாதனைச் சரித்திரம் படைக்கும்.

நம் அனைவரிடையேயும் ஒற்றுமையுணர்வை வளர்த்து, நல்லிணக்கத்தினை உறுதிப்படுத்துகின்ற நல்லாண்டாகவும், நாம் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து வெற்றிநடை போட வழிவகுக்கின்ற புத்தாண்டாகவும் 1993-ஆம் ஆண்டு அமைய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

என் அன்பிற்குரிய தமிழக மக்களுக்கு, எனது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

மார்கழித் திங்கள் - 17

மலர்:23 இதழ்:13

1-1-1993

# வீரத்துறவி விவேகானந்தர்



**தேசிய விழிப்புணர்வு ஆண்டு 1992-இன் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை**

**சு**வாமி விவேகானந்தர் என்னும் ஞான சூரியன் இந்தியாவின் கிழக்குத் திசையிலிருந்து, தெற்கு நோக்கி பாதயாத்திரை வந்து, இருட்டில் சிக்கித் தவித்த பாரதத்திற்கு, ஞான வழிகாட்டிய புனித நிகழ்ச்சியின் நினைவாகக் கொண்டாடப்படும் தேசிய விழிப்புணர்வு ஆண்டுத் தொடக்க விழாவில் கலந்து கொள்ள, வாய்ப்பளித்த விழாக் குழுவிருக்கு என் இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்!

வேதாந்தியாக, வீரத்துறவியாக, சமரச மெய்ஞானியாக, தேசப்பற்றாளராக, போராட்ட வீரராக, ஏழை



பங்காளராக - இப்படி எத்தனை எத்தனையோ பரிமாணங்களைக் கொண்ட அபூர்வப் பிறவி சுவாமி விவேகானந்தர்.

அன்று கல்கத்தாவில் அவர் தொடங்கிய பாதயாத்திரை, இந்தக் கன்னியாகுமரியில் தான் முடிவடைந்தது. அந்தப் பாதயாத்திரையின் நூற்றாண்டு விழா, இன்று இங்கே, சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்படுகிறது.

இந்தியா கன்னியாகுமரியில்



மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வரவேற்கிறார்.

# தேசிய விழிப்புணர்வு ஆண்டுத் தொடக்க விழா

சுவாமி விவேகானந்தர் 1892-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ஆம் நாள் கல்கத்தாவிலிருந்து பாத யாத்திரையாக குமரிமுனை வந்தார். கடல் நடுவே தற்போது விவேகானந்தர் மண்டபம் அமைக்கப்பட்டிருக்கும் பாறைக்கு, அவர் நீந்திச் சென்று தனியாக 3 நாள்கள் (டிசம்பர் 25,26,27) தவம் செய்தார்.

இவ்வாறு அவர் தவம் செய்து 100 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, குமரிமுனையில் உள்ள விவேகானந்தர் கேந்திரம் விவேகானந்தரின் 'பாத யாத்திரை நூற்றாண்டு விழா' மற்றும் தேசிய விழிப்புணர்வு ஆண்டுத் தொடக்க விழா கன்னியாகுமரியில் 28.12.92 அன்று கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு கேரள முதல்வர் திரு. கே. கருணாகரன், முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர் கரன்சிங், இராமகிருஷ்ண மடாலயத்தின் சுவாமி யோகேஸ்வரானந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவுக்கு மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள் தலைமை வகித்தார்.

விழாவில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் பேசுகையில்:-

'இந்து மதத்தவர் என்றால் மூட நம்பிக்கை உள்ளவர்கள் என்று வெளிநாட்டவர்கள் ஒரு காலத்தில் நினைத்துக் கொண்டு இருந்தார்கள். அதை உடைத்து எறிந்தவர் விவேகானந்தர். இந்து மதத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய பெருமை அவருக்கு உண்டு.

'விவேகானந்தர் சிறந்த செயல் வீரராகச் செயல்பட்டார். எனவேதான், அவரை இராமகிருஷ்ண பரமஹம்சர் தனது சீடராக ஏற்றுக் கொண்டார். மதத் தலைவர்கள் நல்ல சிந்தனைகளை - நல்லுணர்வை மக்களிடம் பரப்ப வேண்டும்.

'விவேகானந்தர் தனி மனிதராக இருந்து புதிய மறுமலர்ச்சியை எழுச்சியை உருவாக்கினார். மகாத்மா காந்தி, வினோபா போன்றவர்கள் பணபலம் இல்லாமல் பதவி எதுவும் இல்லாமல் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர்கள். அதற்குக் காரணம் அவர்களது நல்ல கருத்துக்களை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். எனவே, நாட்டில் மத வேற்றுமைகள் இல்லாது, அனைத்து மதத்தினரும் சகோதரப் பாசத்தோடு இந்தியர்கள் என்ற உணர்வோடு வாழ வேண்டும்'' என்றார்.

விழாவில் சுவாமி யோகேஸ்வர நந்தா, ஹபீப் முகமது, டாக்டர் கரன்சிங், ஆர்ச் பிஷப் பெனடிக்மார், கிரிகோரியஸ் ஆகியோரும் பேசினார்கள்.

முடிவடைகிறது என்பது, பூகோள ரீதியான உண்மை. ஆனால், விவே கானந்தரின் புதிய இந்தியா - நவ இந்தியா - ஒரு பொற்கால இந்தியா, இங்கேதான் தொடங்கியது என்பது, சரித்திரம் நமக்கு வழங்கிய கொடை.

இங்கு மூன்று கடல்கள் மட்டும் சந்திக்கவில்லை. உலக நாடுகளிலே வாழ்ந்துவரும், பல்வேறு இன, மதம் தழுவிய மக்கள், தோளோடு தோள் சேர்ந்து நிற்கும் காட்சியையும், இங்கே நாம் காணலாம். இது உலக ஒருமைப்பாட்டை அனைவருக்கும் உணர்த்தும் ஒப்பற்ற மண்.

அண்மைக் காலமாக, நாட்டில் நாம் காணும் ரணங்கள், மேகமூட் டங்களைப் போல இந்த உண் மையை மறைக்கலாம். ஆனால், இருளைக் கிழித்து வரும் முழு மதி யைப் போல, சமயச் சார்பற்ற இந்தியா வெளிப்படும் என்பதை, உலகிற்குச் சொல்லுகிற நல்ல நிகழ்ச் சியாக, இந்த நிகழ்ச்சி நமக்கு அமைந்துள்ளது.

'இந்திய தேசம் பெரியது. இது ஞானத்தின் களஞ்சியம். ஆன்மீகத் தின் விளை நிலம்', என்பதுதான் சுவாமி விவேகானந்தரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த உண்மை தெரியாதவர்களுக்குள்ளே தான் குழப்பம். இந்த நம்பிக்கையில் எழுந் தது தான் அவரது நாட்டுப்பற்று. உன்னத இமயம் போல், ஓங்கி நிற்கும் அவரது நாட்டுப்பற்று தான், கோடானு கோடி பாரத வீரர்களை உருவாக்கியது என்பதை எண்ணிப் பார்த்து, நான் பெருமைப்படுகிறேன்.

இந்த மண்ணில், எந்தப் பகுதி யில் நின்றாலும், இந்தப் பூமியில், எந்தப் பகுதியில் நின்றாலும், அவர் தன்னை அசைக்க முடியாத நாட்டுப் பற்றுள்ள இந்தியன் என்றே கரு தினார்.

அன்று சிகாகோ-விலே சிங்க மென அவர் கர்ஜித்த போது, இந்தி யாவின் ஆத்மாவின் முழக்கமாக, அது எட்டுத் திசைகளிலும் கேட்டது. அவருடைய நாட்டுப்பற்று, குறுகிய மனப்பான்மைகளுக்கும், வகுப்பு வாதங்களுக்கும், அப்பாற்பட்டு விளங்கியது என்பது, நடுநிலை யாளர்களுக்கு நன்றாகவே தெரியும். தனி ஒரு மனிதனோ அல்லது ஒரு நாடோ, மற்ற சமூகத்தினரிடம் இருந்து, விலகி நின்று வாழ முடி யாது என்று, மனித சமூகம் முழு வதற்கும், அவர் உரத்த குரலில் எடுத்துக் கூறியவர்.

இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், 'உன் கடமை ஏழ்மையையும் அறியாமை யையும் ஒழிப்பதே', என்று எடுத்துக் கூறியவர் அவர்.

அந்த மகத்தான இந்தியரின், மனிதாபிமானியின், மாமனிதரின் இதயத்தைக் கவர்ந்த மாநிலம், தமிழகம். அவர் அமெரிக்கா செல்வ தற்கான ஊக்கம் வழங்கப்பட்ட இடம், தமிழகம். அதற்கு உதவிய பெருமகனார், இராமநாதபுரம் ராஜா என்பதையும், சிகாகோ-வில் வெற்றிக்கொடி நாட்டி அவர் திரும்பியபோது, அவரை வர வேற்றுச் சிறப்பித்தவரும் அவர்தான் என்பதையும், இன்று எண்ணிப் பார்க்கும்போது, நான் பூரித்துப் போகிறேன். விவேகானந்தரின் சிறப்பை, முதலில் முழுவதும் உணர்ந்தது, தமிழகம்தான் என்பதை யும் எண்ணிப் பார்த்து, நான் பெருமைப்படுகிறேன்; பெருமிதம் கொள்கிறேன்!

எந்தச் சீர்திருத்தக் கருத்துக்கும், எந்த ஒப்பரவு மனப்பான்மைக்கும், உற்ற இடம் தமிழகம் தான். மத மாச்சரியங்களும், ஜாதிப் பிணக்கு களும், வகுப்புக் கலவரங்களும், இல்லாத சமரசப் பூமி, தமிழகம்! இது அமைதிப் பூஞ்சோலை!

விவேகானந்தரின் பாதயாத் திரை முடிந்த இந்த இடத்தில், நமது இலட்சிய யாத்திரை - இந்திய தேசத் தின் யாத்திரை - நவ பாரதத்தின் யாத்திரை - இன்று தொடங்க வேண்டும்.

3 நாட்கள் விவேகானந்தர் தவமிருந்த, தமிழகத்திலுள்ள இந்தப் பாறை, ஒரு நினைவுச் சின்னம் மட்டுமல்ல; இன்றும் நமக்கு வழி காட்டிக் கொண்டிருக்கும், ஒரு ஆன்மீகக் கலங்கரை விளக்கம்!

சமயச்சார்பற்ற பாரதம் என்னும் தத்துவத்தை நிலைநாட்ட, ஒன்று பட்ட ஒரே இந்தியா என்பதை உறுதிப்படுத்த, தமிழக மண் தான் ஏற்றது என்பது, வரலாறு உணர்த்து கின்ற போதனை!

அமைதி நிறைந்த, ஆன்மீகச் சிறப்புமிக்க, சகல சயமங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கிற, ஒப்பற்ற பாரதத்தை உருவாக்க வேண்டும் என்று தான், சுவாமி விவேகானந்தர் இங்கே தவமிருந் தார். இங்கே இருக்கிற அன்னை கன்னியாகுமரி, நித்தம் தவம் செய் வதும் அதற்காகத்தான்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய என் நெஞ்சத் தவமும், தங்கத் தமிழ் மக்களது அன்புத் தவமும், அது தான். விவேகானந்தரின் பாத யாத்திரை முடிவடைந்த இந்த இடத் தில், இந்தியாவின் ஒற்றுமை யாத் திரையை, நவ பாரதத்தின் இலட்சிய யாத்திரையைத் தொடங்கி, நாம் வெற்றி வாகை சூட வேண்டும், என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.







# புரட்சித்தலைவர் இன்றும் வாழ்கிறார் என்றும் வாழ்வார்

மனிதன், பிறந்தான் - வாழ்ந்தான் - மறைந்தான் என்பதுதான் வாழ்க்கை நியதியாக இயற்கை நமக்கு அளித்துள்ளது. ஆனால், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரோ பிறந்தார் - வாழ்ந்தார், இன்றும் நம் இதயத்தில் வாழ்கிறார். இனி என்றென்றும் வாழப் போகிறார் என்கிற தனி நியதியை உருவாக்கிச் சென்றுள்ளார்.

அவர் வளர்ந்து வந்த பாதை, அனைவருக்கும் பாடமாக அமையத் தக்கதாகும். இளமை முதல் அவர் வாழ்க்கையில் எதிர் கொண்ட இடர்ப்பாடுகள் ஏராளமாகும். அனைத்தையும் அவரது மனோபலத்தினாலும் - ஒப்பற்ற மனிதாபிமான அணுகுமுறையாலும் எளிதில் வென்று எதிர்ப்புகளையும், இடர்ப்பாடுகளையும், சாதனைகளாக்கிச் சரித்திரம் படைத்தவர் புரட்சித் தலைவர்.

* * *

## மாண்புமிகு முதல்வர் உரை

* * *

கலைத்துறையிலும் - பொது வாழ்க்கையிலும், தன் சொந்த வாழ்க்கையிலும் சரித்திரச் சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி - இழப்புகளையும், இடர்ப்பாடுகளையும், சோதனைகளையும், சாதனையாக்கிக் காட்டிய, ஈகைக் குணம் கொண்ட ஏந்தல், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், இச்சட்டமன்றப் பேரவையிலும், தமிழக ஆட்சியிலும், சாதனைகள் பலவற்றை நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

11 ஆண்டுகள் முதலமைச்சராய் இப்பேரவையில் அங்கம் வகித்து, தமிழகத்தை ஆட்சி செய்தார் என்பது மட்டுமல்லாமல், தொடர்ந்து எவ்வித இடைவெளியும் இல்லாது, மும்முறைதேர்தல்களில் மக்களால் முதலமைச்சராக ஆக்கப்பட்டு, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே தலைவர், அவர்தான் என்ற சிறப்பையும் - கீர்த்தியையும் பெற்றவர் புரட்சித் தலைவர் ஆவார்.

இச்சட்டமன்றப் பேரவையில் மற்ற எல்லா முதலமைச்சர்களையும்விட, மிக அதிகமான ஆண்டுகள், 1967 முதல் தொடர்ந்து 20 ஆண்டுகள் உறுப்பினராகவும் அங்கம் வகித்து, ஒரு பிரச்சினையில் மிக அதிக நேரம் பேசியவர் என்ற சாதனையினையும் நிகழ்த்தியவர். 1979 பிப்ரவரி 26-ஆம் தேதி தேதி, அவரது அமைச்சரவையின் மீது கொண்டு வரப்பட்ட, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்குப் பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அன்று ஒரே நாளில் தொடர்ந்து 7 மணி நேரம் பேசினார்.

இச்சட்டப்பேரவை வரலாற்றில், நிலைத்திருக்கும் சாதனைகள் பல நிகழ்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தமிழக முதல்வராய் நிர்வாகத்திலும் வியக்கத்தகு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

தனது அரசியல் ஆசான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டிய, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற நெறியினைத், தன் ஒரே நோக்கமாகக் கொண்டு, ஆட்சி நடத்தினார். தனது ஆட்சியின் மூலம், அதிகபட்ச நன்மைகள், தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதிலேயே, கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அவர்தம் வாழ்நாள் முழுவதும் ஏழைகளின் பாதுகாவலராக வாழ்ந்ததால் தான், தமிழக மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும், குடிகொண்டுள்ள ஈடுஇணையற்ற தலைவராக இன்றும் வாழ்கிறார், என்றும் வாழ்வார்.

***(31.1.1992 அன்று சட்டப்பேரவையில் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)***



இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த மனிதாபிமானியாக, இருபது ஆண்டுக் காலம் தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்னனாக, மக்கள் திலகமாக, முதிர்ந்த அரசியல் வித்தகராக, மூன்று முறை தமிழக முதல்வராக, தன் தனி முத்திரையைப் பதித்து, வாழும்போதே வரலாற்று நாயகனாக திகழ்ந்து, நினைத்ததையெல்லாம் முடித்த வெற்றி வீரர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் புவியாண்ட அந்த புரட்சித் தலைவனுக்குப்புகழ்மண்டபம், பார் புகழ எழுப்பப்பட்டுள்ளது.

சத்துணவு தந்த வரலாற்று நாயகனின் நினைவிடம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி ரூ.1½ கோடி செலவில் அழகுறப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இப்புகழ் மண்டபம் 24.12.1992 வியாழக் கிழமையன்று - புரட்சித் தலைவரின் ஐந்தாவது நினைவு நாளன்று பொதுமக்கள் பார்வைக்கெனத் திறந்து வைக்கப்பட்டது.

தலைசிறந்த சிற்பிகள மற்றும் நிபுணர்களின் கைவண்ணத்தில் பொன்மனத் தலைவரின் தூய நல் இதயத்தை எடுத்துக் காட்டும் வகையில், அகன்ற இதழ்கள் நடுவே புரட்சித் தலைவர் அவர்களின் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

வருவோரை வரவேற்கும் வகையில் கை கூப்பி வணங்கும் வடிவத்தில் 44 அடி உயர நுழை வாயில் அமைக்கப்பட்டுள்ளது.

தாமரை இதழ்களின் நடுவே அமைக்கப்பட்டிருக்கும் எம்.ஜி.ஆர். சமாதியை ஒட்டி, நினைவுத் தூண் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. அந் நினைவுத் தூண் உச்சியில், சக்தி வாய்ந்த 'மெர்குரி' விளக்கு ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். சமாதிப் பகுதியிலிருந்து நுழைவு வாயில் வரையில் 3 இடங்களில் வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நீரூற்றுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நினைவிடத்தின் பின் அமைப்பில் உயர்ந்த தொரு கல்தூண் அமைக்கப்பட்டுள்ளது. அதன் உச்சியில் புரட்சித் தலைவர் அவர்கள் மக்களை நேசித்த பாங்கினை விளக்கும் வகையில், இணைந்து நிற்கும் நாற்கரங்களின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நினைவக வடிவமைப்பு குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுகையில்,

# புவியாண்ட புரட்சித் தலைவருக்குப்





# புகழ் மண்டபம்

‘‘எம்.ஜி.ஆர். சமாதியின் நுழைவுவாயிலிலே அமைக்கப்பட்டிருக்கும் ‘குவிந்த கரங்கள்’ போன்ற அமைப்பு மக்களை வரவேற்கும் விதத்தையும், எம்.ஜி.ஆர். அவர்கள் மக்களின் ஒட்டுமொத்தமான அஞ்சலியைப் பெறும் நோக்கையும் பிரதிபலிக்கிறது. எம்.ஜி.ஆர். சமாதியைச் சூழ்ந்திருக்கும் தாமரை இதழ்கள், அவரின் தூய இதயத்தைப் பிரதிபலிப்பதாகவும் அமைகிறது. மண்டபங்களும் புல் தரைகளும், அமைதியையும் ஆலயத்தின் அழகையும் மனதில் படியச் செய்வதாகவும் அமைகிறது. கிரானைட் கற்களால் வடிவமைக்கப்பட்ட கை, மக்கள் மீது எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்ட அன்பை வெளிப்படுத்துவது போலவும் அமைந்திருக்கிறது’’ என்றார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 5-வது நினைவு நாள் 24.12.92 அன்று அனுசரிக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவின் பேரில், சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடம் ரூ.1½ கோடியில் மிகப் பிரமாண்டமான முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு நாளினையொட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் 24.12.92 அன்று பேரறிஞர் அண்ணா சிலையிலிருந்து மௌன ஊர்வலம் நடந்தது. இந்த ஊர்வலத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்த ஜீப்பில் நின்றவாறு வந்தார். அவருடன் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் வந்தார். ‘ஜீப்’ காரைத் தொடர்ந்து அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் தலைமையில், பெண் எம்.எல்.ஏ.-க்கள் அணி வகுத்துச் சென்றனர்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எம்.ஜி.ஆர். சமாதியில் மலர் வளையம் வைத்து வணங்கி அஞ்சலி செலுத்தினார். அவர்களைத் தொடர்ந்து அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மலர் அஞ்சலி செலுத்திய பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் நினைவிட வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு வந்தனர். எம்.ஜி.ஆர். நினைவு அஞ்சலி உறுதிமொழிகளை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் படிக்க, மேடையிலிருந்தவர்களும், நினைவிட வளாகத்துக்கு வெளியே குழுமி இருந்தவர்களும் அவற்றை திரும்பக் கூறி உறுதி ஏற்றனர்.

# அதிநவீன முறையில் ரூ.40 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள நேரு விளையாட்டரங்கம்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்!

அனைத்து நாட்டுத் தரத்திற்கு ஏற்ப, ஆசியாவிலேயே சிறந்த விளையாட்டு அரங்குகளில் ஒன்றாக, ரூ. 40 கோடி செலவில் சென்னையில் உருவாக்கப்பட்டுள்ள நேரு விளையாட்டு அரங்கை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 30.12.'92 அன்று ஒரு மணி நேரம் பார்வையிட்டு, மேலும் அழகுபடுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த அரங்கில் அடுத்த மாதம் (ஜனவரி) 18-ஆம் தேதி ஜவஹர்லால் நேரு தங்கக் கோப்பைக்கான 10-வது சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டிகள் தொடங்குகின்றன. 18-ஆம் தேதி புதிய விளையாட்டு அரங்கை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் திறந்து வைக்கிறார்.

புதிய விளையாட்டு அரங்கத்தின் தரைப்பகுதி, முதல்தளம், இரண்டாவது தளம் மற்றும் பிரமுகர்கள் அமரும் இடம் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார். செய்யப்பட்டுள்ள நவீன வசதிகளையும், முதல்வர் அவர்கள் கேட்டறிந்தார். மேலும் அழகுபடுத்துமாறு ஆலோசனைகளையும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர்கள் அழகு திருநாவுக்கரசு, எஸ். கண்ணப்பன், இ. மதுசூதனன், டி.எம். செல்வகணபதி, தலைமைச் செயலாளர் டி.வி. வெங்கட்ராமன், ஒலிம்பிக் சங்கத் தலைவர் சிவந்தி ஆதித்தன், தமிழ்நாடு கால்பந்தாட்டக் குழுத் தலைவர் விஸ்வநாதன் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் உடன் சென்றனர்.











# தமிழ் இசைச் சங்க - இசை விழா

தமிழ் இசைச் சங்கம் ஆண்டு தோறும் டிசம்பர்த்திங்களில், இசை விழாவை நடத்தி வருவது நாம் அறிந்ததே. இந்த ஆண்டுக்கான இசை விழா 21.12.92 அன்று தொடங்கியது. இந்த ஆண்டு தமிழ் இசைச் சங்கத்தின் பொன் விழா என்பதும் குறிப்பிடத்தக்கது.

விழாவுக்கு, பிரபல பாடகர் திரு. கே.ஜே. ஜேசுதாசு தலைமை வகித்தார், விழாவை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இசை விழாவையொட்டி, சிறந்த இசைக் கலைஞர் ஒருவரைத் தேர்ந் தெடுத்து, அவருக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற சிறப்புப் பட்டத் தைத் தமிழ் இசைச் சங்கம் வழங்கி வருகிறது. அதன்படி, திரு. கே.ஜே. ஜேசுதாசுக்கு மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள், 'இசைப் பேரறிஞர்' எனும் பட்டத்தை வழங் கினார்.

விழாவில் மாண்புமிகு நிதி யமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும் போது கூறியதாவது:-

'தமிழ் இசைச் சங்கத்தின் வெள்ளி விழாவிலும், அதைத் தொடர்ந்து 38-வது ஆண்டு விழா விலும், அதைத் தொடர்ந்து இன்று 50-வது ஆண்டு விழாவிலும் கலந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

பொன்-விழா ஆண்டில், இசை உலகில் பேரொளி வீசும் கே.ஜே. ஜேசுதாசுக்கு 'இசைப் பேரறிஞர்' பட்டம் வழங்கி இருப்பதும் விழா வுக்கு அவர் தலைமை ஏற்பதும் பெருமையாகும்.

தமிழ் இசைக் கலையைக் கட்டிக் காப்பாற்றும் பொறுப்பு நமக்கு உள்ளது. இந்த இசையைப் பல்வேறு இடையூறுகளுக்கு இடையே தமிழ் இசைச் சங்கத்தார் வளர்த்து வரு கிறார்கள்.

தமிழ் இசைச் சங்கத்தின் பொன் விழா ஆண்டில், இசையை வளர்க்க பல்கலைக் கழகங்களைப் பயன் படுத்தி மாவட்டங்களில் இசை விழாக்களை நடத்தலாம்.

'தலைமுறை தலைமுறையாகத் தமிழிசை வளர்க்கப்பட்டு வருகிறது. தொல்காப்பியனார் காலம் மற்றும் சங்க காலத்திலிருந்தே தமிழிசை வளர்ந்து கொண்டு வருகிறது. முறையோடு செம்மையாகத் தமிழிசை வளர்ந்து வந்தாலும் இடையே இருண்ட காலமும் இருந்ததுண்டு.

ராஜா அண்ணாமலைச் செட்டி யார், சண்முகம் செட்டியார், மூதறிஞர் ராஜாஜி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களின் ஆதரவோடு இது சிறப்புற்று வளர்ந்து வருகிறது. மனிதனுக்கு மகிழ்ச்சி அளிப்பது அழகு. அந்த அழகை வெளிப் படுத்துவது கலை. இசை, நாட்டியம், சிற்பம் போன்ற பல கலைகள் இருந்தாலும் இசைக் கலைதான் ஓங்கி நிற்கிறது.

'தமிழ்நாடு இசையைக் கட்டிக் காத்துவரும் தமிழ் இசைச் சங்கத் தைப் பாராட்டுகிறேன். இச்சங்கம் சென்னை, மதுரையில் இருப்பது போல இடங்களிலும் ஏற்படுத்தப் பட வேண்டும்''.

பொன்விழா மலரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளியிட் டார். முதல் இதழை திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி பெற்றுக் கொண்டார்.

விழாவினையொட்டி, தமிழ் இசைச் சங்கம் சார்பில் பல்வேறு இசைப் போட்டிகள் நடத்தப்பட்டன இதில் வெற்றி பெற்ற மாணவ- மாணவிகளுக்கு திரு. கே.ஜே. ஜேசுதாசு சான்றிதழ் வழங்கிப் பாராட்டினார்.

# புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்



## வாழ்க்கைக் குறிப்பு

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மிகவும் அன் போடு நேசிக்கப்படும் இந்திய மனிதருள் ஒருவ ராவார்.

எம்.ஜி.ஆர். என மக்களால் அன்போடு அழைக்கப்படும் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், இலங்கையிலுள்ள கண்டியில் 17.1.1917 அன்று பிறந்தார். இவரது தந்தை அப்போது அங்கு நீதிபதியாகப் பணியாற்றிக் கொண்டி ருந்தார்.

எம்.ஜி.ஆர். குடும்பம் இலங்கையிலிருந்து வெளியேறித் தமிழ்நாட்டுக்கு வந்து கும்பகோணத் தில் குடியேறியது. தந்தையின் மறைவுக்குப் பின் எம்.ஜி.ஆரால் தொடக்கப் பள்ளிக்குமேல், படிப்பைத் தொடர முடியவில்லை. தமது குடும்பத் தைக் காப்பாற்றும் பொருட்டு இவர் ஒரு நாடகக் குழுவில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார்.

எம்.ஜி.ஆரின் நடத்தையில் தமது தாயார் மிகுந்த கவனம் செலுத்தியதன் விளைவாக, சிறு வயதிலேயே மக்கள் மீது கருணையையும் மனித குலத்தை இழிவுபடுத்தும் போக்கினை எதிர்க்கும் பண்பையும் வளர்க்கலானார். அன்போடு ஏழை களுக்குப் பணி செய்வதே கடவுளின் சாம்ராஜ்ஜி யத்தை அடைவதற்கான வழி என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார்.

நாடகத் துறையில் கணிசமான அனுபவம் பெற்ற பிறகு திரைப்படத்துறையில் நுழைய எம்.ஜி.ஆர். கடுமையாகப் போராடினார். திரைப் படத் துறையில் நுழைவது அப்போது அவ்வளவு சுலபமல்ல. இருப்பினும், தமது விடாமுயற்சி மற்றும் சகிப்புத் தன்மையால் திரைப்படத் துறை யில் நுழைந்து நடிக்கத் தொடங்கினார். 1947-ஆம் ஆண்டு முதல் முக்கிய கதாபாத்திரங்களில் கதா நாயகனாக நடித்தார். இவரது திரைப்படங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வசூலில் சாதனை படைத்தது.

திரைப்படங்கள் மூலமாக மக்களிடையே சிறந்த கொள்கைகளைப் பரப்ப முடியும் என்பதில் எம்.ஜி.ஆர். உறுதியான நம்பிக்கை கொண்டிருந் தார். 1954-இல் வெளிவந்த இவருடைய 'மலைக் கள்ளன்' என்ற படம் தேசியப் பாராட்டைப் பெற்றது. இவரே தயாரித்து இயக்கி 1958-இல் வெளிவந்த 'நாடோடி மன்னன்' என்ற படம் இதற்கு முன் அடைந்த சாதனைகளை முறியடிக் கும் விதத்தில் சிறந்த படமாகக் கருதப்பட்டது.

தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்கும் வரை எம்.ஜி.ஆர். 132 திரைப்படங்களில் நடித்திருந்தார். திரைப்படத் துறையில் ஒரு சிறந்த நடிகராகவும், பெரிய இயக்குநராகவும், தயாரிப்பாளராகவும் திகழ்ந்தார். திரைப்படத் தயாரிப்பில் ஒவ்வொரு நுணுக்கங்களையும் நன்கு அறிந்திருந்தார்.

நல்ல ஒழுக்கமுடைய ஒரு மனிதனாகத் திகழ, கடைப்பிடிக்க வேண்டிய நற்குணங்களைத் திரைப் படங்கள் மூலம் மக்களிடையே பரப்பினார். இதன் பயனாக இவருக்கு 1972-இல் மத்திய அரசின் 'பாரத்' பட்டம் வழங்கப்பட்டது.



## பசியைப் போக்கி படிப்பை வளர்ப்போம்!

—அமரர் எம்.ஜி.ஆர்

தமது இளம் வயது முதலே பொதுவாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கலானார் எம்.ஜி.ஆர். இவர் ஒரு தீவிர தேசியவாதி. 'அண்ணா' என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் திரு. அண்ணாதுரையுடன் எம்.ஜி.ஆருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அதன் பயனாக 1953-இல் தி.மு.க.வில் எம்.ஜி.ஆர். சேர்ந்தார். தி.மு.க.வின் கூட்டங்களுக்கு மக்களைக் கவருவதிலும், தேர்தல்களின்போது அதிக வாக்குகள் பெற்றுத் தருவதிலும் எம்.ஜி.ஆர். முக்கியப் பங்காற்றினார்.

பேரறிஞர் அண்ணா தமது இதயத்தில் எம்.ஜி.ஆருக்கென்றே ஒரு தனி இடத்தை வைத்திருந்தார். 1959-இல் சென்னை மாநகராட்சியைத் தி.மு.க. கைப்பற்றுவதற்கு எம்.ஜி.ஆரின் செல்வாக்கே ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. அன்றுமுதல் தொடர்ந்து தி.மு.க. வெற்றிமேல் வெற்றி பெற எம்.ஜி.ஆர். அரும்பாடுபட்டார். 1962-இல் சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம், எம்.ஜி.ஆர். தமிழகச் சட்டப்பேரவை உறுப்பினரானார்.

1967 தேர்தல் பிரச்சாரத்தில் எம்.ஜி.ஆர். ஈடுபட்டிருந்தபொழுது நடிகர் எம்.ஆர். ராதாவால் சுடப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனையிலிருந்து கொண்டே தேர்தலில் போட்டியிட்டு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் எம்.ஜி.ஆர். வெற்றி பெற்றார்.

1962-இல் சீனா இந்தியா மீது போர் தொடுத்தபோது யுத்த நிதிக்கு ரூ.75 ஆயிரம் நன்கொடை வழங்கி முதல் நன்கொடையாளராகத் திகழ்ந்தார். அதைப்போலவே வங்கதேச யுத்தத்தின்போது வங்க தேசப் பாதுகாப்புக்காகத் தீவிரப் பிரச்சாரமும் செய்தார்.

1969-இல் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு திரு. மு. கருணாநிதி அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து கருணாநிதி முதல்வராக எம்.ஜி.ஆர். அரும்பாடுபட்டார். 1971-இல் தி.மு.க. பெற்ற பெரும் வெற்றிக்குப் பிறகு, கட்சித் தலைமையின் போக்கைக் கட்சித் தொண்டர்களும் மக்களும் எதிர்க்கத் தொடங்கினர். அப்போதைய முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்களுக்கும் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. கட்சியை நல்வழியில் கொண்டு செல்ல டாக்டர் எம்.ஜி.ஆர். எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, அப்போது கட்சியின் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆரை திரு. கருணாநிதி அவர்கள் கட்சியிலிருந்து நீக்கினார்.

இதைத் தொடர்ந்து மக்களின் பெரும் ஆதரவுடன் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய கட்சியை 17.10.1972 அன்று எம்.ஜி.ஆர். தோற்றுவித்தார். 1972 முதல் 1976 முடிய இந்த இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற எல்லா இடைத் தேர்தல்களிலும் இந்தக் கட்சி அமோக வெற்றிபெற்றது. 1976-இல் தி.மு.க. அமைச்சரவை கலைக்கப்பட்டது.

1977 மற்றும் 1980 பொதுத்தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.க. அமோக வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. முதல்வராகப் பொறுப்பேற்ற எம்.ஜி.ஆர்., ஏழைகளின் வாழ்வு உயரும் வகையில் தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் திட்டம் தீட்டினார். கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகித இடம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார். குழந்தை நலத்திட்டம், கிராம மக்களுக்கான தன்னிறைவுத் திட்டம், நலிந்த பிரிவு மக்களுக்கு உதவும் வகையில் 'ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை' போன்ற பல்வேறு சமூக நலத் திட்டங்களைத் தொடங்கினார்.

முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டம், மனிதவள மேம்பாட்டில் ஒரு விவேகமான முதலீடு எனப் பாராட்டப்படுகிறது. தேசிய மேம்பாட்டுக்கு இந்தத் திட்டம் மிகவும் இன்றியமையாதது. இந்தத் திட்டம், நாட்டின் எதிர்காலக் குடிமக்களா



## அவரே ஒரு கவிதை!

நமது எம்.ஜி.ஆர். அவர்கள் பேசும்பொழுது, அழகும், உள்ள உணர்ச்சியும் உள்ளதுதான் 'கவிதை' என்று சொன்னார். இதைச் சொல்லும் போது நீங்கள் எல்லாம் கைதட்டி மகிழ்ந்தீர்கள். எதற்காகக் கைதட்டுகிறீர்கள் என்று எண்ணிப் பார்த்தேன். அப்போது தான் அவர் தன்னைப் பற்றிப் பேசினார் என்று புரிந்தது. அது அவருக்குத் தான் பொருந்தும்.

- பேரறிஞர் அண்ணா.
(இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, சென்னை, 1968)

## கலைவாணர் வழியில்...!

கலைஞன் என்பவன் மிகவும் நுணுக்க மானவன்! மனிதர்களிலிருந்து மிகவும் வேறு பட்டவன்; மாறுபட்டவன்! உண்மையை உணர மறுப்பவர்களுக்கு உணரவைப்பவன் கலைஞன். அப்படி உணரவைத்த கலைஞர்களில் கலை வாணர் என்.எஸ். கிருஷ்ணன் தலை சிறந்தவர்!'

கலைவாணர் வழியில் கருத்தாலும் கடமை ஆற்றும் திறத்தாலும் சிறந்த ஒரே கலைஞர் தம்பி எம்.ஜி. இராமச்சந்திரன் ஒருவர்தான்!

- பேரறிஞர் அண்ணா.

---

கிய குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் ஒட்டுமொத்த நலனுக்கு ஒரு சுமூகமான சூழலை உருவாக்கியிருக்கிறது. மனித முக்கியத்துவத்துக்கு இது ஒரு காணிக்கையாகும்.

குழந்தைகளுக்கும், பணிபுரியும் ஏழைத் தாய் மார்களுக்கும் காலணிகள் வழங்கும் திட்டத்தையும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்த கங்கள் வழங்கும் திட்டத்தையும் கொண்டு வந்தார். 1984-இல் 'வாழ்க்கை முறைக் கல்வி'த் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். பொருளாதாரத் தில் நலிவடைந்த பிரிவினருக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டித்தரத் திட்டங்கள் தீட்டினார்.

இந்தியாவிலேயே முதன் முதலாகப் பெண் களுக்காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தனித்தனியே பல்கலைக் கழகங்கள் நிறுவி, தமிழகத்தில் உயர்கல்வியின் வளர்ச்சிக்கு ஊக்க மளித்தார். இதுதவிர தொழில் பயிற்சிக் கல் லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள் என ஏராளமான கல்லூரிகளை நிறுவினார்.

மூன்றாம் தமிழ்ச் சங்கம் ஆட்சி செலுத்திய மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடத் தினார். இலங்கை, ஹாங்காங், பர்மா, சிங்கப்பூர், ஜப்பான், பிரான்சு, மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்து திரும் பினார். மத்திய அரசுடன் நல்லுறவு கொண்டி ருந்தார்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும், மதச்சார் பின்மைக்கும் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்ட இத்தலைவர், இன ஒற்றுமையைப் பேணிக் காப்பதில் மற்றவர்களுக்கு முன்மாதிரி யாகத் திகழ்ந்தார்.

தனித்து விளங்கும் தன்மைக்காகவும், அவரது சாதனைகளுக்காகவும், சமூகக் கொடுமைகளை எதிர்த்து இடைவிடாது போராடியமைக்காகவும், கலைச் செறிவிற்காகவும், ஆக்கச் சக்திக்காகவும், அவரது புத்துணர்ச்சிமிக்க பணிக்காகவும் மக்களி டையே தமது கருத்துக்களை கவர்ச்சிகரமாக எடுத்துக்கூறியமைக்காகவும், மனித நேயத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டிற்காகவும், சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டத்தை (Doctor of Laws - Honoris Causa) வழங்கிச் சிறப்பித்தது.

1984-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. மகத்தான வெற்றியைப் பெற்றது. அமெரிக்காவிலுள்ள புரூக்ளின் மருத்துவமனை யில் சிகிச்சை பெற்றுக் கொண்டே தமிழ்நாட்டில் தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பின ரானார். அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின் 10.2.85 அன்று தமிழகத்தின் முதல்வராக மூன்றாம் முறையாகப் பதவியேற்றார். தொடர்ந்து மூன்று முறை அவர் முதல்வராகப் பொறுப்பேற்ற திலிருந்தே, மக்கள் அவர் மீது கொண்டிருந்த அளவுகடந்த அன்பினைப் புரிந்து கொள்ளலாம்.

வாழும்போதே வரலாறான இம்மாபெரும் மக்கள் தலைவர் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1987 டிசம்பர் திங்கள், 24-ஆம் நாள் காலை 3 மணிக்கு சென்னைக்கு அருகே ராமா புரத்திலுள்ள அவரது தோட்டத்தில் இயற்கை எய்தினார்.

# 1300 ஆண்டுப் பழமை வாய்ந்த அரிய துர்க்கைச் சிற்பம்!

தென்னார்க்காடு மாவட்டம், செஞ்சி வட்டத்தைச் சேர்ந்த சிங்கபுரம் என்னும் ஊரில் ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த துர்க்கையின் அரிய கற்சிலையொன்று இருப்பது, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டறியப்பட்டுள்ளது.

உருவ அமைதியினைக் கொண்டு பல்லவர் காலத்ததாகக் கருதத்தகும் இச்சிலையினைத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் இயக்குநர், திரு. நடன. காசிநாதன் அவர்களின் அறிவுரையின் பேரில், துணை இயக்குநர், திரு. கு. தாமோதரன் அவர்களும், கல்வெட்டாய்வாளர், திரு. வி. இராமமூர்த்தி அவர்களும் சென்று கண்டறிந்தனர். இச்சிலை இவ்வூரில் இருக்கும் தகவலைச் சென்னையைச் சேர்ந்த ஆசிரியர் திரு. முத்து எதிராசன் அவர்கள் இயக்குநரிடம் தெரிவித்திருந்தார்.



இடக்காலை எருமைத் தலையில் மீதூன்றி, திரிபங்க நிலையில் நிற்கும் துர்க்கை, சக்கரம், நீண்டவாள், குறுவாள், அம்பு ஆகியவற்றை வலக்கரங்களிலும், சங்கு, கேடயம், கத்தி, வில் ஆகியவற்றை இடக்கரங்களிலும் ஏந்திய நிலையில் தோற்றம் அளிக்கிறாள்.

சிற்பம், பல்லவர் காலச் சிற்பங்களின் அனைத்துக் கலையம்சங்களையும் பெற்றுத் திகழ்கிறது. சிற்பத்தின் தலைக்கு வலப்புறமும், இடப்புறமும் முறையே மானும், சிம்மமும் காட்டப்பட்டுள்ளன. காலுக்கருகில் இருபுறமும் இரு அடியார்கள் வணங்கியமர்ந்த நிலையில் காணப்படுகின்றனர். சுமார் 4 அடி உயரமுள்ள செவ்வக வடிவிலான பலகைக் கல்லில் இவையனைத்தும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தன் வாகனங்களாகிய சிம்மத்தையும், மானையும் ஒருங்கே கொண்டு விளங்கும் இச்சிலை அற்புதமான படைப்பாகும். தமிழ் இலக்கியங்களில் துர்க்கை 'சிங்கவாகினி' என்றும், 'பாய்கலைப் பாவை' என்றும் வருணிக்கப்படுகிறாள். இவ்விலக்கிய வருணனைகளுக்கு உருவகமாகத் திகழும், இத்தகைய சிலை இதுவரை தென்னார்க்காடு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுபோன்றதொரு சிலை இருப்பதை, சென்னைப் பல்கலைக்கழகம், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் கண்டறிந்துள்ளது.

மருத்துவம்

# மூளைக்காய்ச்சலைத் தடுப்பது எப்படி?

டாக்டர்
எம்.ஏ. அலீம், எம்.டி.,

**மூளைக் காய்ச்சல் நோய் எப்படி ஏற்படுகிறது? நோயின் அறிகுறிகள் என்னென்ன? அதை வரும் முன் எப்படித் தடுத்துக் கொள்ளலாம்? என்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் விடையாக இந்தக் கட்டுரை அமைந்திருக்கிறது. அத்துடன், இதைத் தடுக்கும் முறையும் இதில் கூறப்பட்டுள்ளது.**

திருச்சி மாவட்டம், அரியலூர், ஜெயம்கொண்டம், மனப்பாறைப் பகுதிகளில் ஆண்டுதோறும் மழைக் கால மாதங்களான அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மூளை அழற்சி எனப்படும் 'மூளைக் காய்ச்சல்' நோயால் அதிகமான குழந்தைகள் இறந்து வருகின்றன.

இந்நோய் கழிவுநீர் தேங்கி உள்ள பகுதிகள், நீர் நிறைந்த நெல் வயல்கள் சுற்றி உள்ள இடங்கள் ஆகிய பகுதிகளில் வாழும் குழந்தை களையே அதிகம் பாதிக்கின்றது. இவ்வாண்டு இவ்வகை மூளைக் காய்ச்சல் நோய் இளைஞர்களையும், பெரியவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை.

**மூளைக் காய்ச்சலுக்குக் காரணம் என்ன?**

தமிழகத்தில் இந்த ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் கொசுக் களால் ஆர்.என்.ஏ. வகையைச் சார்ந்த 'பி' பிரிவு ஆர்போ வைரஸ் மூலம் பரப்பப்படுகின்றது. மூளைக் காய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய இவ் வகை வைரஸ் பன்றிகள், ஆடு, மாடு போன்ற கால்நடைகள், கோழி, வாத்து போன்ற வீட்டுப் பிராணிகளின் உடலிலும் இரத்தத் திலும் நோயை ஏற்படுத்தாவண்ணம் நிறைந்து இருக்கின்றன.

**பரவும் விதம்**

இவ்வகைப் • பிராணிகளைக் கொசுக்கள் கடிக்கும் போது மூளைக் காய்ச்சல் வைரஸ் அடங் கிய பிராணிகளின் இரத்தம் கொசு வால் உறிஞ்சப்பட்டு அவற்றின் நடுக்குடல் பகுதிக்கு வைரஸ்கள் சென்று வளர்ச்சி அடைந்து, இரண்டு வாரத்திற்குள் கொசுவின் மூளை, உமிழ்நீர்ச் சுரப்பிகளை அடைந்து, மனிதர்களையோ மற்ற பிராணிகளையோ தாக்க ஆயத்த மாகின்றன. இதுபோன்ற வைரஸ் அடங்கிய கொசு கடிக்கும் மனிதன் எதார்த்தமாகத்தான் ஆளாகின்றான்.

மனிதர்களை வைரஸ் அடங்கிய கொசு கடிக்கும்போது, வைரஸ்கள் மனிதர்களின் மேல் தோலின் இரத்தத் தந்துகிகளில் செலுத்தப் படுகின்றன. பின்பு மனித உடலில் செலுத்தப்பட்ட வைரஸ் கிருமிகள் உடலின் நிணநீர்ச் சுரப்பிகள், மண்ணீரல், இரத்தக் குழாய்ச் சுவர் செல்கள் ஆகியவற்றில் 4 முதல் 21 நாட்களுக்குள் முழு வளர்ச்சி அடைந்து, மூளையின் இரத்தக் குழாய்களைத் துளைத்துக் கொண்டு, மூளைத் திசுக்களைத் தாக்கி, மூளைக் காய்ச்சல் நோயை ஏற் படுத்துகின்றன.

**மூளைக் காய்ச்சல் யாருக்கு ஏற்படும்?**

தமிழகத்தில் ஏற்படும் மூளைக் காய்ச்சல் நோய் பெரும்பாலும் 3 வயது முதல் உள்ள குழந்தை களையே அதிகம் தாக்குகின்றது. நகர்ப்புறங்களில் இருப்பவர்களை விட, கிராமப்புறங்களில் வாழ்கின்ற வர்கள் அதிகமாக இந்நோய்த் தாக்கு தலுக்கு ஆளாகின்றனர்.

மூளைக் காய்ச்சல் வைரஸ் கொண்ட கொசுக் கடிக்கு ஆளாகும் அனைவருக்கும் இந்நோய் ஏற்படு வது கிடையாது. கொசுக் கடிக்கப் படுபவர்களில் 500-இல் ஒருவர் அல்லது 1000-த்தில் ஒருவர்தான் இந்நோய்க்கு ஆளாகின்றனர். தமிழக மக்களிடத்தில் 50 சதவிகிதத் திற்கும் அதிகமானவர்களிடம் இந்த மூளைக் காய்ச்சல் வைரஸ் அடங் கிய கொசுவால் கடிக்கப்படும் போது, உடல் எதிர்ப்புச் சக்தி மிகவும் குறைவாக உள்ள 500-இல் ஒருவர் அல்லது 1000-த்தில் ஒருவர் மட்டுமே நோய்வாய்ப்படுகின்றனர்.

**நோய்க்கான அறிகுறிகள்**

மூளைக் காய்ச்சல் பரவி வரும் பகுதிகளில், ஒருவருக்கு மூளைக் காய்ச்சல் ஏற்படக்கூடும் என்பதை, ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அறிய முடியும். முழுமையாக இந் நோய் ஏற்பட ஒன்று முதல் ஏழு நாட்களுக்கு முன், கடுமையான குளிர், தலைவலி, திடீர்க் காய்ச்சல், உடல் அசதி, உணவில் சரிவர நாட்டமின்மை, அடிக்கடி வாந்தி போன்ற தொந்தரவுகள் ஏற்படும். பின்பு காய்ச்சலின் அளவு அதி கரித்து 100 முதல் 102 டிகிரி வரை மருந்து கொடுத்தாலும் குறையாது காய்ச்சல் தொடரும். அத்துடன் குழப்பம், முன்னுக்குப் பின் முர ணான பேச்சு, செயல், ஆகியவற்று

டன் அதிகரித்த தலைவலி, கழுத்துத் தசைகளில் விறைப்பு போன்ற தொந்தரவுகள் சிலமணி நேரத்தில் ஏற்படும். இத்துடன் உதடுகள், நாக்கு ஆகியவற்றில் துடிப்பும், கைகளில் நடுக்கமும் உண்டாகும். பின்பு கால்களைவிட, கைவிரல்கள் இறுக்கமாக மூடியபடி கைகள் விறைத்து முறுக்கிக் காணப்படும். இந்த நிலை நீடிக்கும்போது, உடலில் வலிப்பு ஏற்பட்டு சுயநினைவு நிலையில் மாற்றம் உண்டாகி, கொஞ்சம் கொஞ்சமாக மயக்கநிலை ஏற்பட்டு இறக்க நேரிடுகிறது.

★ வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொண்டால் மட்டும் போதாது; விலங்கினங்கள் கூடத்தான் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்கின்றன. அவற்றினின்றும் மேம்பட்ட நிலையை மனிதன் அடைவதற்குத் தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் ஓர் ஒழுங்கினை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.



இந்நோயில் அதிக வேர்வை, அதிகரித்த சுவாசம், நுரையீரலில் நீர் சேர்தல், காய்ச்சல் எந்தச் சிகிச்சைக்கும் குறையாத நிலை ஆகியவை நோயின் முற்றிய நிலையை உணர்த்தக் கூடிய அறிகுறிகளாக இருக்கின்றன.

இம்மூளைக்காய்ச்சல் நோய்க்கு முழுமையாக ஆளாகின்றவர்களில் 50 முதல் 60 சதவிகிதத்தினர் இறந்துவிட நேரிடுகிறது. உயிர் பிழைப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு, மூளைத்திசு பாதிப்பு காரணமாக அறிவு வளர்ச்சி குறைபாடு, பேச முடியாமை, வாதம் போன்ற தொந்தரவுகள் ஏற்படுகின்றன.

**சிகிச்சை**

இந்த மூளைக்காய்ச்சல் நோய்க்கு, ஏற்படும் தொந்தரவுக்குத் தக்கவாறு சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. குறிப்பாக மூளைத்தண்டுவட நீரின் அழுத்தத்தைக் குறைக்கவும், வலிப்பு ஏற்படுவதற்கும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றைத் தவிர, புதிதாக இம்மூளைக்காய்ச்சல் வைரஸ் கிருமிகளை அழிப்பதற்காக வைரஸ் எதிர் மருந்துகளும் ஆராயப்பட்டு வருகின்றது.

**தடுப்பு முறை**

மூளைக்காய்ச்சல் நோய் ஏற்படாமல் தடுக்க, அது கொள்ளை நோயாக உருவெடுக்கும், மழைக்கால மாதங்களுக்கு முன்பாகவே இந்நோய்க்கான தடுப்பூசி போட்டுக் கொள்வதன் மூலம் இந்நோயைத் தடுக்க முடியும்.

**தடுப்பூசி**

இந்த மூளைக்காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி இந்த நோய் உண்டாக்குகின்ற வைரஸ் கிருமி செலுத்தப்பட்ட சுண்டெலி மூளைத் திசுவில் இருந்து இந்தியாவிலேயே ஜப்பானியக் கூட்டு முயற்சியுடன் தயாரிக்கப்படுகின்றது. இந்தத் தடுப்பூசி கசௌலி, மைய ஆராய்ச்சி நிலையத்தில் ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் தடுப்பூசிகள் என்ற எண்ணிக்கையில் தயாரிக்கப்படுகின்றன.

இந்தத் தடுப்பூசியை 7 முதல் 14 நாட்கள் இடைவெளியில் இரண்டு ஊசிகள் போடப்பட வேண்டும். ஊசி போடப்பட்ட நாட்களில் இருந்து ஓராண்டுக்கு ஒருமுறை ஊக்கு ஊசியாகவும் போடப்பட வேண்டும். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைக்கு ½ சி.சி. வீதமும் அதற்கு மேற்பட்ட குழந்தைக்கு 1 சி.சி. வீதம் இந்த ஊசி போடப்படுகின்றது. தடுப்பூசி போடப்பட்டதில் இருந்து ஒரு மாதக் காலத்திற்கு பின்பே, மூளைக்காய்ச்சல் நோய்க்கான எதிர்ப்புச் சக்தி உடலில் ஏற்படுவதால், இந்நோய் ஏற்படுவதான மழைக்கால மாதங்களுக்கு ஒரு மாதம் முன்னதாகவே இந்நோய் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் இந்தத் தடுப்பூசி போடப்பட வேண்டும்.

இந்நோய்க்கான தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு மூன்றாண்டுகளுக்குப் பின் மீண்டும் இந்தத் தடுப்பூசி போட்டுக்கொள்வதன் மூலம் அறவே இந்த மூளைக்காய்ச்சல் நோய் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

**கொசு ஒழிப்பு**

இதைத் தவிர, கொசுவால் இந்நோய் அதிகம் பரவுவதால், கொசு வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் இந்நோய் பரவலைத் தடுக்க முடியும். கொசு வளர்ச்சிக்கு ஏதுவான கழிவு நீர்த் தேக்கங்கள், ஓடைகள் மூடிய கழிவு நீர்ப் பாதைகளாக மாற்றப்பட வேண்டும்.

நெல் வயல்களில் கொசு வளர்ச்சிக்கு உதவும் தேங்கி இருக்கும் நீர் வடித்துவிடப்பட வேண்டும்.

வீடுகளில் கொசு வளர்ச்சியைப் போக்க, துணிகளைத் தொங்கவிடாமல், அடைசலாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வீட்டிலும் சுற்றுப்புறத்தில் கொசுக்களை அழிக்க கொசுக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட வேண்டும். கொசுக் கடிக்காமல் இருக்க கொசு வலைகள் அல்லது மின்சாரம் மூலம் எரிக்கப்படும் கொசு விரட்டிகள் அல்லது உடலில் தடவிக் கொள்ளும் இரசாயனி கொசு விரட்டிகளை உபயோகிக்கலாம்.

வீட்டு வளர்ப்புப் பிராணிகள் சுத்தமான முறையில் பாதுகாக்கப்பட்டு, அவை வளர்கின்ற இடங்களில் கொசு வளர்ச்சிக்கான சூழ்நிலைகள் அழிக்கப்படவேண்டும்.

**சத்துணவு**

குழந்தைகளின் உடலில் எதிர்ப்புத் திறனை வளர்க்க, குறித்த காலத்தில் மற்ற நோய்க்கான தடுப்பூசிகள் போட்டுக் கொள்வதுடன், சத்து நிறைந்த சத்துணவுகளை உட்கொள்ளவும் செய்ய வேண்டும்.

இந்த முறையில் செயல்படின், இனிவரும் ஆண்டுகளில் மூளைக் காய்ச்சல் ஏற்பட்டு குழந்தைகள் உயிரிழக்கும் நிலையைத் தடுக்க முடியும்.



# தொட்டில் குழந்தைகளை வளர்க்க ஐந்து பெண்கள் முன்வந்தனர்

தங்களுக்குப் பிடிக்காத பெண் குழந்தைகளை, பிறந்ததும் கொன்றுவிடும் கொடுமையைத் தடுக்க, அரசு அமைத்துள்ள தொட்டில்களில் அந்தக் குழந்தைகளைப் போட்டு விடலாம் எனத் தமிழக அரசு அறிவித்திருந்தது.

இத்தொட்டில்களில் இதுவரை போடப்பட்ட பெண் குழந்தைகளில் 5 குழந்தைகள் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் பெயர் சூட்டப்பெற்றன.

தாம்பரத்திலுள்ள எஸ்.ஓ.எஸ். என்ற குழந்தைகள் காப்பகத்தில் அந்தக் குழந்தைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இந்த ஐந்து குழந்தைகளையும், தனது குழந்தைகள் போல் வளர்த்துக் கொள்ள ஐந்து பெண்கள் முன் வந்தனர். தாம்பரம் எஸ்.ஓ.எஸ். காப்பகத்தில் நடைபெற்ற விழா ஒன்றில், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் புலவர் இந்திரகுமாரி அவர்கள், குழந்தைகளை அந்தப் பெண்களிடம் ஒப்படைத்தார்.

ஜெயலட்சுமி என்ற குழந்தையை அமுதா என்ற பெண்ணும், ராஜலட்சுமி என்ற குழந்தையை முத்துலட்சுமி என்ற பெண்ணும், தனலட்சுமி என்ற குழந்தையை வத்சலா என்ற பெண்ணும், மகாலட்சுமி என்ற குழந்தையை பானுமதி என்ற பெண்ணும், கல்யாணி என்ற குழந்தையை லட்சுமி என்ற பெண்ணும் பெற்றுக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் வெள்ள நிவாரணப் பணி:

# விவசாயிகளுக்கு ரூ.861.55 இலட்சம் செலவில் இலவசமாக இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன.

கடந்த நவம்பர் 1992-இல் எதிர்பாராத அளவிற்கு 13,14,15 ஆகிய தேதிகளில் பெய்த பெருமழை மற்றும் புயல், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தினால் கன்னியாகுமரி, சிதம்பரனார், திருநெல்வேலி, இராமநாதபுரம், காமராசர், திண்டுக்கல்-அண்ணா, திருச்சி, மதுரை, தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தென்னார்க்காடு ஆகிய 11 மாவட்டங்களில் நெல், கரும்பு, தென்னை, பருத்தி, எண்ணெய்வித்துப் பயிர்கள், பயறு வகைகள், சிறு தானியங்கள் சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில் சுமார் ரூ.63 கோடி வரையிலான விளைபொருட்களுக்குச் சேதம் ஏற்பட்டது.

இதனை அடுத்து, உடனடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதிப்பு அளவினைக் கணக்கெடுத்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. தமிழக அரசு, பாதிக்கப்பட்ட சிறு/குறு விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகளுக்குத் தக்க இழப்பீடு செய்யும்பொருட்டு, ரூ.861.55 இலட்சம் செலவில் நிவாரண உதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

சிறு/குறு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட விகிதங்களில் உதவி வழங்க இந்த ஆணை வகை செய்கிறது.

| பயிர் | வெள்ள நிவாரண உதவித் தொகை (எக்டேருக்கு ரூபாயில்) சிறு/குறு விவசாயிகள் | இதர விவசாயிகள் |
|---|---|---|
| நெல்: முழு பாதிப்பு | 900 | 550 |
| பகுதி பாதிப்பு | 300 | 250 |
| தென்னை ரூ.15 ஒரு பாதிக்கப்பட்ட மரத்துக்கு ஒரு கன்று வீதம் | | |
| கரும்பு | 2000 | 1000 |
| பருத்தி | 1200 | 600 |
| எண்ணெய்வித்து | 2200 | 1100 |
| பயறு வகைகள் | 350 | - |
| சிறுதானியங்கள் | 350 | 200 |

மேற்கண்ட நிவாரணம் முழுவதும் இடுபொருட்களாக மட்டுமே வழங்கப்படும். இதற்குத் தேவையான இடுபொருட்களான விதை, பூச்சி மருந்துகள், சிங்க் சல்பேட், இரசாயன உரங்கள், யூரியா, டிஏபி மற்றும் பொட்டாஷ் அனைத்தும் அந்தந்தப் பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையான இரசாயன உரங்கள் 'தாய்' நிறுவனம் மூலம் அந்தந்தக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிவாரணப் பொருட்கள் விநியோகத்தை, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் அண்மையில் தூத்துக்குடியில் தொடங்கி வைத்து இடுபொருட்களை விநியோகம் செய்தார். இதுவரையில் 470 மெ.டன் நெல் விதைகள், 2035 தென்னங்கன்றுகள், 6700 லிட்டர் பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள், களைக்கொல்லிகள், 3765 மெ.டன் இரசாயன உரங்களான டிஏபி, யூரியா, பொட்டாஷ் மற்றும் சிங்க் சல்பேட் ஆகியவை ரூ.165 இலட்சம் அளவிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் 54,666 சிறு/குறு விவசாயிகளும் 9,647 இதர விவசாயிகளும் பயனடைந்துள்ளனர்.



# வலிப்பு நோய்-சில செய்திகள்

டாக்டர் சி.எம். வேல்முருகேந்திரன்

**'வலிப்பு நோய் விழிப்புணர்ச்சி வாரம்', தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டது. அந்நோய் பற்றி, அத்துறையில் புகழ் மிக்க மருத்துவரான டாக்டர் சி.எம். வேல்முருகேந்திரன் அவர்களைச் சந்தித்து விவரம்கேட்டு விரிவாக்கப்பட்ட கட்டுரை இது:**

வலிப்பு நோய் என்று கூறப்படுவது ஒரு வியாதி அல்ல; இது காய்ச்சல், இருமல் போன்ற ஒரு நோயின் அறிகுறியே ஆகும்.

மனிதனின் மூளையில் 2 பில்லியன் நரம்பு செல்கள் உள்ளன. இவை வேதியல் மாற்றங்களினால் தான் வேலை செய்கின்றன. இந்த மாற்றங்களினால், மின்சக்தி தோன்றி ஒரு செல்லுடன், இன்னொரு செல் தொடர்பு கொண்டு செயல்படுகின்றன. இந்த மின் உற்பத்தியானது மிகைப்பட்டு மின் அலையாகி, அதுவே முற்றி மின்புயல் ஆகும்போது தான் ஒருவருக்கு வலிப்பு நோய் காணப்படுகிறது.

**நோயின் முக்கிய காரணம்**

இம்மாற்றங்களுக்குக் காரணங்கள் யாவை என்பதைப் பற்றி விளக்குவது அத்துறையில் உள்ள எனது கடமையாகும்.

1. குழந்தை கருவில் இருக்கும் போது, தாயாருக்குத் தோன்றும் வைரஸ் இன்பெக்ஷன், இரத்தப் போக்கு ஆகியவை குழந்தை மூளை வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும். பிரசவத்தின்போது, அதற்காக அதிக நேரம் நீடித்தல், குழந்தையானது தலை கீழாக மாறி, முதலில் கால் வெளிப்படும்படியாகப் பிறத்தல், நச்சுமாலையானது சிசுவின் கழுத்தில் சுற்றிக் கொள்ளல் போன்ற சில வேண்டா விளைவுகளினால் மூளைக்குக் கிடைக்கும் பிராணவாயு தடைப்பட்டு மூளையானது பாதிக்கப்படும்.

2. தலையில் அடிபடுதல்

3. மூளையில் கட்டி ஏற்படுதல்.

4. உடலில் தோன்றும் வேதியல் மாற்றங்கள். அதாவது இரத்தத்தில் சர்க்கரை குறைதல், கழிவுப் பொருட்கள் அதிகரித்தல் போன்ற மாற்றங்கள் ஏற்படுதல்.

5. இரத்தக் குழாய் தொடர்பான நோய்கள்; குறிப்பாக இரத்தக் குழாய் வெடித்து, மூளையில் இரத்தம் கசிதல், மூளைக்குப் பாயும் இரத்தம் குறைதல்.

6. மூளைக் காய்ச்சலுக்கு ஆட்படுதல்.

7. உடலுருக்கி நோய்களில் முதன்மையான T.B.

இந்நோய்களே மேற்கூறிய மாற்றங்களை மனித உடலில் தோற்றுவிக்கும். சிலவேளைகளில், வியாதி என்னவென்று புலப்படாமலேயே, வலிப்பு நோய் (Idiopathic Epilipsy) ஏற்படுவதும் உண்டு.

**நோயின் அறிகுறிகள்**

வலிப்பு நோய் என்பது பல வகைப்படும்.

1. பொதுவான வலிப்பு நோய் (Generalised Seizure) என்று ஒன்று உண்டு. அ) அடுத்தது பெருவலிப்பு (Grandmal) என்பது. இந்நோய் உள்ள நோயாளி திடீரென்று கத்திக் கொண்டு (Epileptic Cry) நினைவிழந்து கீழே விழுவார். மூச்சு விடுவதே சில நொடிகளுக்கு நின்று விடும். கை கால்கள் வெட்டி வெட்டி இழுக்கும். வாயில் நுரை நுரையாக வரும். நாக்கே துண்டாகிவிடுவது போலக் கடித்துக் கொள்வர். வாயிலிருந்து இரத்தம் கலந்த எச்சில் வெளிவரும்.

பிறகு சிறிது நேரத்தில் நோயாளியின் கை, கால் ஆட்டங்கள் நின்று விடும்; பிறகு, நினைவிழந்து விடுவார். இப்படிப்பட்டவர்கள் மலமும் சிறுநீரும் கழித்துவிடுவதும் உண்டு. கொஞ்சம், கொஞ்சமாகத்தான் அவர்களுக்கு நினைவு திரும்பும். சிலர் அப்படியே தூங்கியும் விடுவார்கள்.

ஆ) சிறுவலிப்பு (Petitamal) இது 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே உண்டாகும் ஒருவகையான வலிப்பு நோயாகும். சில நொடிகள் நினைவிழந்து விடுவார். ஆனால் கீழே விழுந்துவிடமாட்டார்.

இ) மயோக்ளோனிக் ஜொ்க் (Myoclonic Jerk). இந்த வகை வலிப்பு நோய் கண்ட இவர்களுக்குத் திடீரென்று, கை, கால்கள் வெட்டி இழுக்கும். கையில் உள்ள பொருள் எதுவானாலும் கீழே தவறி விழலாம்.

**ஒரு பக்க வலிப்பு(Partial Seizure)**

அ) இந்த வகை நோய் உள்ளவர்களுக்கு, முகம் ஒரு பக்கம் கோணிக்கொண்டு போக நேரிட

## பார்த்தோம்

நவம்பர் 1,16 ஏடுகள் ஒரு சேரப் பெற்றுப் பார்த்துப் படித்த தில் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். போற்றிப் பாதுகாக்க வேண்டிய நேரு, பசும்பொன் தேவர் திருமகன், அதேபோல் கலைவாணர் என்.எஸ். கே., அன்னை இந்திரா ஆகிய திருவுருவப் படங்கள் மிக அருமை. மிகக் குறைந்த விலையில் அதே சமயம், இதுவரை எந்த இதழிலும் வராத சேதிகளாக, என்.எஸ்.கே., தேவர் பற்றியவை இருந்தன. பாராட்டுக்கள்.

- பொன்.சேது விசயகுமார்,
சாலிக்கிராமம்,
சென்னை.

இந்திராகாந்தியின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தேன், மிக அருமை.

- சு. பெரியசாமி,
வெங்கமேடு,
திருச்சி மாவட்டம்.

*16.11.1992* இதழில் 'கலை உலகின் முழுநிலவு' எனும் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் பற்றி புலவர் தமிழ்ப்பித்தன் அவர்கள் எழுதிய கட்டுரை பய னுள்ளதாக இருந்தது.

- க. இளங்கோ
தாடையாம்பட்டி,
மதுரை.

'கலை உலகின் முழுநிலவு' கலைவாணர் பற்றிய புலவர் தமிழ்ப் பித்தன் அவர்கள் கட்டுரை, வாழ் வியலை உள்ளடக்கிக் கருத்தை வெளியிட்டு வாழ்ந்த என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குச் சூட்டும் புகழாரமாகும்.

- இன்பவல்லி வாசுதேவன்,
கீரைசாத்து

கவிஞர் பூங்கோவன் அவர் களின் 'மது மனிதர்க்குப் பகை' கவிதை மதுவினால் ஏற்படும் தீமை களைத் தெள்ளத் தெளிவாக விளக் குவதாக அமைந்திருந்தது.

- கெ. குமாரப் பிள்ளை
கன்னியாகுமரி.

## படித்தோம்

'மது மனிதர்க்குப் பகை.' கவிதை, குடிப்பழக்கத்தை மறக்க உதவும் ஓர் மருந்தாக அமைந்தது.

- என். குப்புசாமி
புங்கோடை
திருச்சி மாவட்டம்.

கலைமாமணி குன்னக்குடி வைத்தியநாதன் வழங்கிய 'சலங்கை விழா' பற்றிய கட்டுரை இன்னும் எங்கள் காதுகளில் 'ஜல் ஜல்' என ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

- ப. முருகேச பாண்டியன்
கரப்பாடி
கோவை மாவட்டம்.

அறிவொளி இயக்கம் பற்றிய கட்டுரை என் மனதை மிகவும் கவர்ந்தது.

- வி. சென்றாயன்,
கருப்பூர்
சேலம் மாவட்டம்.

---

லாம். கை அல்லது கால்களானது வெட்டி இழுக்கக்கூடும். ஒரு பாகத்தி லிருந்து ஆரம்பித்து, மற்ற பாகங் களுக்கும் பரவும்; இவ்வகை நோயாளிகள் நினைவிழக்கவும் வாய்ப்புண்டு.

ஆ) மின்சாரம் பாய்ச்சியது போன்ற உணர்வு இந்த நோயின் வேகத்தால் ஏற்படலாம்.

இ) டெம்பரல் லோப் எபிலப்சி (Temporal lobe epilepsy) Psychomotor Seizure என்ற வகை நோய் உள்ள வர்களுக்கு கண்ணில் மாயத் தோற றங்கள் ஏற்படலாம்; எதிரில் ஏதா வது காட்சிகளையோ பொருட் களையோ தெளிவின்றிக் காண் பார்கள், இவர்கள். அசையாப் பொருட்கள் அசைவது போலத் தோன்றும், பெரிய பொருட்கள் சிறியதாகவும், சிறிய பொருட்கள் பெரியதாகவும், இவர்கள் பார் வைக்குத் தோன்றும். வெளி உலகத் தில் சஞ்சரிப்பது போலவும் தோன்ற லாம். இவர்களுடைய காதில் விநோத ஒலிகள் கேட்கக்கூடும். நாக்கில் ஒரு வகை ருசியும், மூக்கில் ஒரு விதத் துர்நாற்றமும் தோன்றும். சிலருக்கு நெஞ்சு படபடப்பு, வயிற் றில் பந்து போல் கிளம்புதல், வியர்த்துக் கொட்டுதல், முகம் வெளிருதல், மயிர்க் கூச்செரிதல் முதலான மாற்றங்கள் காணப்படும். சிலர் நாவை சப்புக் கொட்டிக் கொள்வர். தன்நிலை தவறி நடப் பர். இவர்கள் நினைவுடன் இருப் பது போலத் தோன்றினாலும், இவர்கள் நினைவின்றியே இக் காரியங்களைச் செய்வதால், இவர் களுக்குத் தான் செய்யும் காரியங்கள் பற்றிய விவரம் தெரியாது.

### குழந்தைகளும் வலிப்பு நோயும்

இவ்வகை நோய்க்கு வயதுக் கணக்கெல்லாம் இல்லை. 6 மாதம் முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தை களுக்கு ஜுரம் கடுமையாக அடிக் கும்போது வலிப்பு நோய் (Febrile fits) ஏற்படுவது உண்டு.

இவ்வலிப்பு நோயால் அவதிப் படுபவர்களுக்கு, நினைவு தவறி விடும்; அதனால், அவர்களால் இதன் விபரத்தை எடுத்துச் சொல்ல முடியாது. இந்நோயால் அவதிப்படு பவர்களை நேரில் கண்டவர்கள் மூலம் தான் அதுபற்றிய விபரங் களை நாம் கேட்டறிய வேண்டும்; இவ்விவரங்கள் மிகவும் முக்கிய மானவைகளாகும்.

நரம்பு மண்டலத்தை முறைப்படி சேர்த்துப் பார்த்தால், மூளை நரம்பு மண்டலத்தில் உள்ள குறைகளை ஒரு மருத்துவர் கண்டறியலாம். மூளையில் கட்டி இருந்தால், கண் நரம்பு வீங்கும். அதனை Opthalmo-scope எனும் கருவியின்மூலம் நேரிலேயே நாம் கண்டறிய முடியும்.

### பரிசோதனை (Test) வகைகள்

**வலிப்பு நோய் கண்டவர்களை மிகக் கவனமாகப் பரிசோதிக்க வேண்டும்; இதற்காகச் சிலவகைச் சோதனை முறைகள் உண்டு. முத லில் தலை பரிசோதிக்கப்பட வேண்டும்.**

தலை X-ray, CT Scan, Magnetic Resonance Imaging முதலியன மூலம் சோதிக்கப்பட்டால் மூளையில் இருக்கும் கோளாறுகளைப் பற்றித் துல்லியமாக அறிந்து கொள்ளலாம்.

இரத்தப் பரிசோதனை (சர்க்கரை, யூரியா) முதலியனவும் இதற்குப் பயனுள்ளவைகளாகும்.

Electro-Encephalograph (மூளையின் மின் அலை வரைவு) என்பதும் மிக முக்கியமான சோதனையாகும். இதன்மூலம் ஒருவரது மூளையில் உள்ள மின் அலை பற்றியும் மின் புயல் பற்றியும் பெரிதும் அறிந்திட வாய்ப்புண்டு.

இது மன நோயல்ல. மன நோயாளிகள் வலிப்பு நோயாளிகளைப் போலக் கை, கால்களைக் கோணல் மானலாக வலிப்பது உண்டு. (Hysterical fits) என்றாலும்கூட, இவர்கள் நினைவு இழக்க மாட்டார்கள். உடல் அடிபடாத அளவில் கீழே விழுவார்கள். ஆனால் நாக்கைக் கடித்துக் கொள்ள மாட்டார்கள். கட்டுப்பாட்டை மீறி மலஜலம் கழிக்கமாட்டார்கள்.

**இது ஒரு புதுநோயா?**

வலிப்பு நோயானது மனித இனத்தில் சிலவகை நோய் போலப் புதிதாகத் தோன்றியது அல்ல.

மனிதகுலம் தோன்றியதிலிருந்து இந்நோய் இருந்திருக்க வேண்டும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த பதினெண் சித்தர்கள் எழுதிய நூலிலேயே இந்நோயைப் பற்றிய முழு விவரமும் காணப்படுகின்றது. இவர்கள் வலிப்பில் 21 வகை இருந்ததாக எழுதியுள்ளனர். ஒவ்வொரு வகைக்கும் ஒரு பறவை அல்லது மிருகத்தின் பெயரை இட்டிருக்கின்றனர். பெரு வலிப்பைக் 'காக்காய் வலிப்பு' என்றும் கூறியுள்ளனர். வெந்நீரில் குளித்தபின் பிதற்றிக் கொண்டு வலிப்பு நோய் வந்தால் அதனை 'முயல் வலிப்பு' என்றனர்.

ஆயுர்வேதத்திலும், சரகா என்பார் எழுதிய வடமொழி நூலிலும் வலிப்பு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பாபிலோனியர்கள், கல்லாலான கூரிய கருவிகள் மூலம் மண்டை எலும்பை உடைத்து, கெட்ட ஆவிகளை வெளிப்படுத்திக் குணப்படுத்த முயன்றுள்ளனர்.

ரோமானியர்கள் கெட்ட ஆவி மனிதனைப் பிடிக்கும்போது மன நோய் தோன்றுமென்றும், நல்ல ஆவியினால் வலிப்பு நோய் உண்டாகுமென்றும் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

இன்னும் நம்நாட்டில் அதே போன்ற மூடநம்பிக்கைகள் சில இருக்கின்றன. வலிப்பு நோயுற்றோரைக் கட்டைகளாலும், இலைகளாலும் அடித்தல், அவர்களுக்குச் சூடு போடுதல் முதலியவற்றை இன்னும் காணலாம். வலிப்பு நோய் கண்டவர்களுக்குக் கையில் இரும்புச் சாவியைக் கொடுத்தல், மூக்கில் புகை ஏற்றுதல் முதலிய பழக்க வழக்கங்கள் இருப்பதையும் பார்க்கலாம்.

**இந்நோய்க்கு மருந்து உண்டா?**

இந்நோயைக் குணப்படுத்த சிறந்த மருந்துகள் இல்லை எனச் சொல்லப்படுவது தவறு; இந்நோய் நீக்கும் மருந்துகள் சில உள்ளன. அம் மருந்துகளை 3 முதல் 5 ஆண்டுக் காலம் வரை நோயாளி தவறாது உட்கொண்டுவந்தால் இந்நோய் நீங்கும்.

வலிப்பு நோய் நீக்கும் முக்கிய மருந்துகள் சிலவற்றின் பெயர் விவரம் வருமாறு:

1. பினோபார்பிடோன் (Phenobarbitone)
2. பினைட்டாயின் (Phenytoin)
3. கார்போமசீபின் (Carbomazephine)
4. சோடியம் வால்பரேட் 'Sodium Valproate)
5. பிரிமிடோன் (Primidone)
6. ஜெரான்டின் (Zarontine)

- இவை மட்டுமன்றி, மேலும் பத்துக்கும் மேற்பட்ட மருந்துகள் அண்மைக் கால ஆராய்ச்சியில் பயனுள்ளவை எனக் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன.

ஒருவர் தனக்கு வலிப்பு வரும் என்று முன்கூட்டியே உணர்ந்தால், அருகில் உள்ள பத்திரமான இடத்தில் படுத்துக்கொள்ள வேண்டும். பக்கத்தில் இருப்பவர்கள் அவர்களைத் தாங்கிப் பிடித்து அடிபடாமல் பக்குவமாகப் படுக்கவைக்க வேண்டும். தலையை ஒரு பக்கமாகத் திருப்பி வைத்தால், வாயிலிருந்து வரும் உமிழ்நீர் நுரையீரலுக்குப் போகாமல் வெளியில் வழிந்து விடும்.

நாக்குக் கடிபடாவண்ணம், பற்களுக்கு இடையில் ஒரு கைக் குட்டையையோ, பென்சிலையோ அல்லது ஒரு துணியையோ பாதுகாப்பாகச் சுற்றி வைக்கலாம்.

வலிப்பு வந்து நின்ற பிறகு, டாக்டரிடம் அழைத்துச் சென்று காட்டவேண்டும். வலிப்பு நோயாளியின் வாயில் தண்ணீர், சோடா முதலியவற்றை ஊற்றக் கூடாது.

★ திறமையாகப் பணிபுரிவதற்கு மது ஒருபோதும் உதவியாக இருந்தது இல்லை; ஊறு பயக்கின்ற ஒரு தடையாகவே இருந்து வந்துள்ளது. ஒவ்வொரு துளி மதுவும் விஷமே.

- டாக்டர் எச்.சே. டேல்.

★ மது ஒருபோதும் மருந்தாகாது. மருத்துவத்தில் அதற்கு இடமே இல்லை.

- டாக்டர் ஹார்டுவர்டு ஷெல்லி.

★ மது அருந்துவதால் மயக்கம், புலம்பல், பைத்தியம், தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி, வலிப்பு, பக்கவாதம், தொண்டைக் கொதிப்பு, இரைப்பைப் புண், கல்லீரல் வீக்கம், மூத்திர நோய், இருதய நோய், இரத்தக் குழாய் தடித்தல், சுவாசகாசம் பாதிப்பு, என்புருக்கி நோய், குடல் புண், கண்களில் உஷ்ணக் கொதிப்பு, விஷசுரம், பரங்கிநோய் முதலியவை வரும்.

- மருத்துவ நிபுணர் சர். விக்டர் ஹார்ஸ்லி.



தமிழரசு

16.1.1993

பொங்கல் இதழ்

தருமபுரி மாவட்டச்
சிறப்பிதழாக
மலர்கிறது!

★மாவட்ட வரலாற்றுச் சிறப்புகள்!...

★அரசு ஆற்றிவரும் அரும்பணிகள்!...

★நல்வாழ்வு பெற்ற நலிவுற்றோர் சந்திப்புக் கட்டுரைகள்!...

★அழகிய புகைப்படங்கள்!...

★அத்தனையும் தாங்கி பத்திரப்படுத்தத் தக்கதாக அற்புதமாய் வெளிவருகிறது!...

படிக்க - பயன்பெற - பாதுகாக்க

அதனாலோ, கையில் சாவியைக் கொடுப்பதாலோ எந்தப் பயனும் ஏற்படாது.

குழந்தைகளுக்குக் காய்ச்சல் இருந்தால் மின்விசிறியின் கீழே காற்றோட்டமாக வைக்கவேண்டும். உடம்பைக் குளிர்ந்த நீரினால் துடைக்க வேண்டும். அவ்வாறான குழந்தைகளின் பெற்றோர்களே ஆசனத்தின் மூலம் டைசிபாம் என்ற மருந்தைச் செலுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். இம்மருந்து வலிப்பை உடனே நிறுத்தும்.

தோராயமாக நம் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவிகிதத்தினர் இந்நோயால் அவதிப்படுகிறார்கள். மாறாக நூறில் ஒருவருக்கு இந்நோய் வருவதற்கான வாய்ப்பு உண்டு. தமிழ்நாட்டில் 5 முதல் 6 இலட்சம் பேருக்கு இந்த வியாதி இருக்கலாம். மொத்த இந்தியாவைக் கணக்கிட்டால் 60 இலட்சம் பேர் இதனால் அவதிப்படுகின்றனர்.

**விழிப்புணர்ச்சி வாரம்**

(Assiciation of Behavioural and Cognitive Neurology) என்ற அமைப்பு, (61, O.V.M. தெரு, சேப்பாக்கம், சென்னை-5.) மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படப் பாடுபடுகின்றது. 1990-ஆம் ஆண்டு நவம்பர் 17 அன்று இந்த அமைப்பானது விழிப்புணர்ச்சி நாளை நடத்தியது. இது மக்களிடையே பெரும் ஆர்வத்தை ஊக்குவித்தது. 500-க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு, இந்திய நாட்டில் பல்வேறு பகுதியிலிருந்து வந்த நரம்பியல் நிபுணர்களிடம் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தீர்த்துக்கொண்டனர்.

'இந்திய வலிப்பு நோய்க் கழகம்' நவம்பர் மாதம் 17-ஆம் நாளை நம் நாட்டிலல்லாமல், பல்வேறு நாடுகளிலும் ஆண்டுதோறும் 'வலிப்பு நோய் நாள்' அல்லது விழிப்புணர்ச்சி வாரம் நடத்தப்படுகிறது. இவ்வாறு நடத்தப்படுவதன் நோக்கம் பின்வருமாறு:

**மூடநம்பிக்கையை ஒழித்தல்**

நாட்டில் பல பாகங்களில், வலிப்பு நோய் உற்றோரை பேய், பிசாசு பிடித்தவர்கள் என்றும், பைத்தியம் பிடித்தவர்கள் என்றும் கருதுகின்றனர். அவர்களை அடித்தும், சூடு வைத்தும் கொடுமைப் படுத்துகிறார்கள். இந்தக் கொடுமைகளை நீக்குவது.

**பெண்கள்**

இவ்வியாதியால் பாதிக்கப்பட்ட பெண்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது ஆகும். அறிவிற் சிறந்த, குடும்பத்தைச் சிறப்பாக நடத்தக் கூடிய குணவதியான இளம் பெண்கள் பலரும் வலிப்பு நோய் காரணமாகவே வாழா வெட்டியாக இருக்கிறார்கள்; இந் நிலை மாற்றுவது.

மருத்துவப் பிரிவுச் சட்டத்தில் வலிப்பு நோயையும், மன நோயையும் (பைத்தியம் பிடித்தவர்கள்) ஒன்றாகச் சேர்த்திருப்பதால் விவாக

ரத்து கோருவோருக்கு அது எளிதாகக் கிடைக்கிறது. இதைப் போக்குவது.

**குழந்தைகள்**

அறிவிற்சிறந்த குழந்தைகளும் கூட இந்நோய் காரணமாகவே பள்ளியிலிருந்து விரட்டப்படுகிறார்கள். இவ்வியாதியுள்ள குழந்தைகள் அவதியுறும்போது மற்ற குழந்தைகள் அதைக்கண்டு பயப்படுகின்றனர் என்ற காரணம் காட்டப்படுகின்றது. இவ்வியாதி தொற்றிக் கொள்ளும் என்ற பயமும் ஒரு புறம் சிலருக்கு ஏற்படும். ஆகவே இனி இவ்வாறு நடவாதிருக்க வகை செய்வது. அக் குழந்தைகளுக்குப் போதுமான கல்வி அறிவு கிடைப்பதில்லை.

**வேலைவாய்ப்பு**

மிகச் சிறந்த வேலை நுணுக்கங்கள் தெரிந்த திறமையாளர்கள் கூட வேலை செய்யுமிடத்தில் வலிப்புடன் காணப்பட்டால் அவர்கள் வேலையை இழக்கிறார்கள். இவ்வகைப் பாதிப்புகளை மாற்றுவது.

மலர்ந்து, மணம் வீசவேண்டிய மலர்கள் வாழ்க்கையில் அறியாமையினால் கருக்கப்படுகிறார்கள். ஒரு சாதாரண நோய் காரணமாக வாழ்க்கை முழுவதும் வாடித் துடிக்கும் அவலத்திற்கு ஆளாகிறார்கள். என்ன கொடுமை இது!

வலிப்பு நோய் வந்தவர்கள் எல்லோரையும் போன்ற சாதாரண மனிதர்களே. உடல் வன்மையிலும், அறிவாற்றலிலும் மற்றவர்களைப் போல் தகுதி பெற்றவர்களே. ஜூலியஸ் சீசர் போன்ற மாவீரர்கள் பிகாஸோ போன்ற சிறந்த கலைஞர்கள் எல்லாம் இவ்வாறான வலிப்பு நோயாளிகளாகவே வாழ்ந்திருக்கின்றனர்!

**வலிப்பு நோய் உடையவர்கள் மணந்து கொள்ளலாமா?**

வலிப்பு நோய் உடையவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம்; தவறில்லை; உடலுறவுக்குத் தடை இல்லை. குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம். அதனாலும் பாதிப்பில்லை!

இந் நோயுடைய தாய்மார்கள் கருவுறுதலுக்குத் தடை ஏதும் இல்லை. மருந்துகளைத் தவறாமல் உட்கொள்ள வேண்டும். சில மருந்துகளினால் குழந்தைகளுக்கு ஊறு நேர வாய்ப்புண்டு. அம் மருந்துகளை மட்டும் மருத்துவர்கள் ஆலோசனை கேட்டறிந்து தவிர்க்க வேண்டும். அவர்கள் மருத்துவர் கண்காணிப்பில் இருப்பது அவசியம். கர்ப்ப காலத்தில் வலிப்புற்றால் குழந்தைகளுக்கு ஊறு ஏற்பட வாய்ப்புண்டு. ஆகையால் மிகவும் கவனமாக இருப்பது நல்லது.

**வாகனங்களை ஓட்டலாமா?**

நோய் நின்றபின், முதலிரண்டு ஆண்டுகளுக்கு இந் நோயாளியாக இருந்தவர்கள் விரைவு வாகனங்களை ஓட்டக்கூடாது; பிறகு ஓட்டலாம்.

மருத்துவர்கள் கொடுத்த மருந்தை *3 முதல் 5* ஆண்டுகளுக்குத் தறவாமல் உட்கொள்ள வேண்டும்.

மருந்தைத் தாமாகவே நிறுத்துதல் கூடாது.

தூக்கமின்மையைத் தவிர்க்க வேண்டும். ஆபத்தான சூழ்நிலையில் வேலை செய்தல் ஆகாது.

தண்ணீரில் நீந்துதல், வேகமான வாகனங்களை ஓட்டுதல், நெருப்பு அல்லது ஓடுகின்ற இயந்திரங்களை இயக்குதல் கூடாவே கூடாது. பசியோடிருப்பதும் ஆகாது.

**இந்நோய் தொற்றுமா?**

வலிப்பு என்பது நோயின் அறிகுறியே தவிர, ஆபத்தான வியாதி யல்ல.

இந்த நோய் தொற்று நோயல்ல என்பதையும் அனைவரும் அறிய வேண்டும். ஆகவே, அவர்களைத் தீண்டத் தகாதவர்களைப் போல நடத்தும் நிலை மாற, நாமெல்லாம் பாடுபடவேண்டும்.


தமிழரசு
தமிழ்நாடு அரசு ஏடு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ. 24
அரையாண்டுச் சந்தா ரூ. 12

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ. 12

சந்தாத் தொகையை — மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:—

—உதவி இயக்குநர்

'தமிழரசு' தோட்டம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.



# கலை உலகின் வழிகாட்டி

-பேரறிஞர் அண்ணா

கலைஞர்கள் எல்லோருமே கலையுலகை நான்கு பக்கங்களும் இரும்புத் திரைகள் இட்ட ஒரு வீடாகக் கருதி, அதற்குள் வசித்து வந்தனர். அவர்கள் அரசியல் உலகை மட்டுமல்ல, வெளியுலகைக் கூட எட்டிப் பார்த்தும் அறியார்! இது தமிழகத்தின் தொன்றுதொட்ட வழக்கமாகும்.

இந்த வழக்கத்தை இந்த இருப தாம் நூற்றாண்டில் இன்றைய பிற்பகுதியில்தான் ஒரு சில கலை ஞர்கள் மீறினார்கள். இரும்புத் திரைகள் இட்டுக் கொண்டு வசித்து, அந்தக் 'கலைவீட்டில்' உள்ள பல கணி வழியாக வெளியுலகைச் சிறிது எட்டிப்பார்க்கத் தொடங்கினார்கள்.

சிலர் உள்ளே நின்றவாறே பார்த்தனர். சிலர் தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்த்தனர். அப்படிப் பார்த்தவர்களில் சிலர், தவறாகப் புரிந்துகொண்டு, தலை யை உள்ளே இழுத்துக் கொண்ட னர்; சிலர் சந்தேக அச்சங் கொண்டு நின்றனர்.

ஆனால் அந்தக் கலைஞர்களுக் கெல்லாம் ஒரு 'வழிகாட்டி'யாக இருந்து விட்டவர் புரட்சி நடிகர்.

புரட்சி நடிகர் அந்தக் கலை வீட்டிலிருந்த பலகணி வழியாக எட்டிப் பார்த்ததுடன் நில்லாது - அரசியல் உலகுக்கும் தாவிப் புகுந்தார். அந்த எண்ணம், வருங் காலம் அற்ற கலைஞர்களுக்கும் மறுமலர்ச்சி தருவதாகும். அவருடைய அந்தச் செயல் புரட்சிகரமானது.

மற்ற கலைஞர்களும் அரசியலில் - நாட்டு மக்களின் இதயங்களில் - பங்கு கொள்வதாகக் கூறுகிறார்கள். அவர்கள் எட்டிப் பார்த்ததில் அடிப்படைக் கோளாறு இருக்கிறது!

''புரட்சி நடிகர் வேண்டும் ஆதலால், அவர் புகுந்த அரசியலும் நமக்கு வேண்டும்'' என்று புகுந்த வர்கள் சிலர்.

''புரட்சி நடிகரே சேர்ந்து விட் டாரே! நாமும் புகுந்தால் என்ன?'' என்று சேர்ந்தவர்கள் சிலர்.

''புரட்சி நடிகர் நல்லவர்; அதனால் அவர் புகுந்துள்ள கட்சி யும் நல்லதாகத்தான் இருக்கும்'' என்று பங்கு கொண்டவர்கள் சிலர்.

''புரட்சி நடிகரின் தயவு நமக்கு வேண்டும். ஆகவே அவரது கட்சியின் கொள்கையும் நமக்கு வேண்டும்'' என்று ஒப்புக் கொண்ட வர் சிலர். புரட்சி நடிகரைப் பிடிக் காத காரணத்தால் 'எம்.ஜி.ஆர். சேர்ந்த கட்சி நமக்கு வேண்டாம்' என்று ஓடிவிட்டவர்களும் இருக் கிறார்கள்!

**அகத்திலும் புறத்திலும் சிறந்தவர்**

பொதுவாக, அகம், புறம் என்று கூறப்படுவனவற்றுக்குப் பல வகை யான கருத்துக்களைக் கூறுகின்றனர். அவற்றில் எது சிறந்தது என்று வாதிடு கின்றனர்.

அவற்றுக்கு இரத்தினச் சுருக்க மாக ஒன்றைக் கூற வேண்டு மானால் 'எண்ணம் என்பது அகம்' என்றும், 'செயல் என்பது புறம்' என்றும் கூறலாம்.

**இவற்றில் சிறந்தது அகமா? புறமா?**

தமிழ் மக்கள் அகத்தையும் புறத் தையும் சமமாகவே பாவித்து வந் துள்ளனர்.



அகத்துக்கு ஐந்நூறோ புறத்துக்கு முந்நூறோ - அல்லது அகத்துக்கு முந்நூறோ புறத்துக்கு ஐந்நூறோ பாடவில்லை தமிழன். 'அகநானூறு' 'புறநானூறு' என்றுதான் பாடி னான். அகமும் புறமும் தமிழனுக்கு ஒரே எடை.

இவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு சிறந்து விளங்கும் நாடு, என்றைக் கும் சிறப்பாக வாழ முடியாது.

உதாரணமாக, அக வாழ்க்கை யில் சிறந்த நாடு கிரேக்கம்; புற வாழ்க்கையில் சிறந்தது எகிப்து. இவ் விரு நாடுகளின் நீடு புகழை அறியாதவர் சிலரே! ஆனால் அந்த 'நீடு புகழ்' இன்று எங்கே?

நமது நாடு அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் ஒருங்கே சிறந்து விளங்குவது. அந்தச் சிறப்பு, தமிழனுக்கு இல்லை என்றால், தன் வீட்டில் பால் பொங்கியது போதாது என்று பிறரையும் ''பால் பொங் கிற்றா?'' என்று கேட்டிருக்க முடி யுமா? அதனால்தான் இத்துணைச் சிறப்புகளைக் கொண்டிருக்கிறது இந்நாடு. ஆகவே, தமிழனை 'ஈதல் இசைபட வாழ்ந்தான்' என்கின்றனர்.

இதனை நம் நடிகர்கள் மேற் கொள்ள வேண்டும். அகம் புறம் இரண்டிலும் சிறந்து விளங்க வேண் டும்.

நடிகன் நடிகனாகவே இருந்து விடக் கூடாது. அதுபோல, கலை - கலைகளுக்காகவே இருந்துவிடக் கூடாது.

'நடிகரும் மக்கள் இனமே! அதுபோல் வாழ்வின் வளத்துக்கே கலை உதவ வேண்டும்' என்ற சீரிய நோக்கம் கொண்டார் புரட்சி நடிகர்.

'இந்த நோக்கம் தனக்கு மட்டும் இருந்தால் பயனில்லை; ஏனைய கலைஞர்களுக்குள்ளும் புக வேண் டும்; தான் பெற்ற இன்பத்தை அவர்கள் அடைய வேண்டும்; அதற்குத் தானே முன்னோடியாக இருக்க வேண்டும்' என்று கருதி, தம்மைத் தடுத்தவர்- பகைத்தவர்- வெறுத்தவர் மத்தியில் அரசியலில் தாவிப் புகுந்தார்.

மக்களுக்கு உதவுகிறார் - உதவ வேண்டும் என்று துடிக்கிறார் - உதவி செய்து கொண்டே இருக் கிறார்.

ஆக, அகத்திலும் (நடிப்பிலும்) புறத்திலும் (அரசியலிலும்) ஒருங்கே சிறப்பை எட்டிப் பிடிக்கிறார் எம்.ஜி.ஆர்.

> எம்.ஜி.ஆரிடம் நான் கண்ட ஒரு சிறந்த பண்பு - எந்தப் பிரச்சினையையும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுடைய நலனை நினைவில் வைத்து, அவர் அணுகுவது ஆகும்.
>
> - சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

# நூல் நயம்

## தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு

**ஆசிரியர்: டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்**

**வெளியீடு:**

வசந்தா பதிப்பகம்,
21, தருமராசா கோயில் தெரு,
சென்னை-600 016.

பக்கம்:416 விலை:ரூ.90/-

**ப**த்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தனிப் பெருங்கவிஞர், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள். இவரைத் திருப்புகழ் சுவாமிகள் என்றும் வழங்கினர். வண்ணம் பல சிறப்புறப் பாடிய தால், வண்ணச்சரபம் என்றும் போற்றிப் புகழப்பட்டார். வண்ணம் பாடுவது இவருக்குக் கைவந்த கலையாதலால், வண்ணத்தியல்பு எனும் இலக்கணமும் வகுத்தவர். ஆயிரக்கணக்கான சந்தப் பாடல்கள் பாடியவர்.

'தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு-வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார் சிறப்பாய்வு' என்பது நூலின் தலைப்பு. சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் பட்டத்திற்காக அளித்த ஆய்வேடே இந் நூல்.

நூலாசிரியர் ஆலந்தூர் கோ.மோகன ரங்கன், சிறந்த கவிஞர். இவரது படைப் புகள் பன்மொழிகளில் வெளிவந்துள் ளன. அந்த அனுபவம் ஆழ்ந்த புலமை இந்நூலில் விரிவியிருப்பதைப் பார்க்க முடிகின்றது.

சந்தம் பாடுவதில் தனித்தன்மை மிக்க அடிகளாரைப் பற்றி நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார் ஆசிரியர். சம்பந்தர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள், அருண கிரியார் ஆகியோர் பாடிய சந்தங் களோடு அடிகளாரின் பாடல்களையும் ஒப்பிட்டு காட்டும் பாங்கு பாராட்டுதற் குரியது.

'அடிகளாரின் காலமும் சூழலும்' எனும் தலைப்பில் அடிகளாரின் வாழ்க்கை வரலாறும் இவ்வாய்வு ஏட்டில் இணைந்திருக்கிறது. ஏழு இயல்களில், எடுத்துக் கொண்ட பொருளைத் திறம் படவும், கச்சிதமாகவும், கருத்துக் கோவை யுடனும் முடித்துத் தந்துள்ளார், ஆசிரியர்.

ஆராய்ச்சி மாணவர்களுக்குக் கையே டாக மட்டுமல்ல, அடிகளாரைப் பற்றி அறிந்து கொள்வார்க்கு இன்பம் பயக்கும் சிறந்த இலக்கியப் படைப்பாகவும் விளங்கு கிறது.

## நூல்நயம் கயல்விழி

**ஆசிரியர்: தி.நா. அறிவுஒளி**

**வெளியீடு:**

தமிழ் ஆய்வரங்கம்
2/25 எட்டாவது தெரு, இணைவு-2
மறைமலைநகர்-603 209.

பக்கம்:166 விலை:ரூ.15/-

**மை**சூர் மன்னன் சுந்திருவன், மதுரை மன்னர் திருமலை நாயக்கர் இருவருக்குமிடையே நடைபெற்ற மூக்கறுப்புப் போர் என்னும் வரலாற்று நிகழ்ச்சியை அடித்தளமாக வைத்துக் கட்டப்பட்ட புதினம் இது. ஒரு சிறு செய்தியை வைத்து ஒரு நவீனத்தைப் படைத்திருப்பது பாராட்டுக்குரியது.

கயல்விழி என்னும் கதைத் தலைவி படிப்போரைக் கவர்கிறாள். நாடு காக்கும் திருப்பணியில் தன்னையே தியாகம் செய்து உயர்ந்து விடுகிறாள். அவளது அவல நிலை, படிப்போரின் நெஞ்சத்தைக் கசக்கிப் பிழிந்து விடுகிறது.

இரு பாத்திரங்களின் வாயிலாக, திருமலை மன்னரின் வரலாற்றைக் குறிப்பிடும் ஆசிரியர், அவர் வாழும் காலத்திலேயே அவரது மறைவுச் செய்தியையும் அவரது சந்ததியினரின் ஆட்சி பற்றியும் குறிப்பிடுவது பொருத்த மில்லை (பக்கம்-62)

விறுவிறுப்பான கதைப்போக்கு, இனிய கவிதை நடை, கதை நிகழ் காலத்திற்குரிய சொல்லாட்சி ஆகியவை இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

**—தமிழ்ப்பித்தன்**

## நிலவளம் காக்கும் உயிரிகள்

**ஆசிரியர்: எம்.எல்.பி. முருகேசன்**

**அறிவுக்கு வையகம் எப்போதும் தன் வணக்கத்தைச் செலுத்தும். திறமைக்கு ஆதரவு தரும். தூய உள்ளத்தை வரவேற்கும்.**

**- இங்கர்சால்**

**வெளியீடு:**

கார்த்திக் பதிப்பகம்,
36-ஏ-7, கோவிந்தன் சாலை,
சென்னை-600 033.

பக்கம்:112 விலை:ரூ.18/-

**ம**ழை வளம் மண் வளத்துக்கு அடிப்படையாகிறது. மண் வளம் பயிர் வளத்துக்கு அடித்தளமாகிறது. அந்த வகையில் மண் வளத்துக்குச்சில உயிரிகள் பெருந்தொண்டு புரிகின்றன. கீழ் மண்ணை மேலே கொண்டு வருவதற்கும், மேல் மண்ணைக் கீழே வருவதற்கும் அவை உதவுகின்றன.

பாக்டீரியா, காளான்கள், ஆல்காக்கள் முதலான நுண்ணுயிரிகளும், அராக்நிடா, பொய்த் தேள்கள் முதலான மண்வாழ் சிறுவகை விலங்குகள் குறித்தும் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

நிலவளம் காக்கும் உயிரிகளைக் காக்க மனிதன் முயற்சிக்க வேண்டும். கிராமப்புறங்களிலும், வயல் காடுகள் நிறைந்த பகுதிகளிலும் கனரக வாகனங்கள், தேவையற்ற நடமாட்டம் இவற்றை மனிதன் தவிர்த்தாக வேண்டும் என்பது இந்நூலாசிரியருடன் வேண்டுகோள். ஏன், நம் வேண்டுகோளும் அதுவே!

**—மறைமலை**

## 'கனல் புனலானது ஓர் புரட்சிக் கதை

**ஆசிரியர்: கவிஞர் மதுரம் நம்பி**

**வெளியீடு:**

கீதாஞ்சலி நிலையம்
மெயின்ரோடு, விருகாவூர்-606 203.
தெ.ஆ. மாவட்டம்

பக்கம்:87 விலை:ரூ.9/-

**ப**ண்ணையார் ஆத்மநாதன், அவர் மனைவி தர்மாம்பாள், மகன் சத்யசீலன், தர்மாம்பாள் தம்பி அடைக்கலம், பண் ணையார் கதிர்வேலு அவர் மகள் பூங்குழலி இவர்களைச் சுற்றிச் செல்கிறது கதை.

அடைக்கலத்தின் கொடுமை தாளா மல் அவன் மனைவி தற்கொலை செய்து கொள்ளுகிறாள். இதனால் தண்டிக்கப் பட்டு பின் வெளியில் வந்த அடைக்கலம், பூங்குழலியைக் கெடுத்துவிட்டு ஓடிவிடு கிறான். ஊரைவிட்டு வெளியேறிய பூங் குழலி குடும்பம் பூங்குழலியை விரும்பும் சத்ய சீலனால் ஆதரிக்கப்பட்டு, எவ்வாறு பூங்குழலி புதுவாழ்வு பெறுகிறாள் என்பதுதான் கதை.

கதையின் இடையில் சம்பவங்களுக்கு ஏற்றாற்போல் கவிதைகள் புகுத்தி இருப்பது சிறப்பு.

**—என். குமாரசாமி**



# நீங்க நல்லா இருக்கணும்

## பத்திரிகைகள் பாராட்டுகின்றன

நமது எம்.ஜி.ஆர்.

வெறுமனே மதுவிலக்குப் பிரச்சாரப் படமாக இல்லாமல், வலுவான கதை, உயிரோட்டமான யதார்த்த மிகுந்த பாத்திரங்கள், கருத்தாழமிக்க வசனங்கள் ஆகியவை படம் பார்ப்பவர்களை முழுமையாக ஈர்க்கிறது.

தினத்தந்தி

'நீங்க நல்லா இருக்கணும்' - மது அரக்கனுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட முதல் கணை. வரவேற்க வேண்டிய படம்.

மாலை முரசு

படம் வெளியான நாள் முதலே கேளிக்கை வரி விலக்கு. அதுவும், ஆறு மாதத்திற்கு. படத்தின் சிறப்புக்கு இது போதுமே! மது அடிமைகளுக்கு ஒரு பாடம்.

தினமணி

மதுவிலக்குப் பிரச்சாரப் படம் என்றாலும், அந்த 'நெடி' இல்லாமல் வெகு ஜாக்கிரதையாக எடுத்திருக்கும் விசுவை முதலில் பாராட்ட வேண்டும். செய்திப் படம் போல் காட்டாமல், அழுத்தமான - உணர்ச்சிகரமான சம்பவங்களை வைத்திருக்கிறார்.

மக்கள் குரல்

பெண்களிடம் எழுச்சி, புதிய விழுப்புணர்ச்சிக்கு வித்திடும் கதை. ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு உணர்வைத் தூண்டிடும் மையக் கரு. மது அடிமைகளுக்கு மாறுதலான படம். உருப்படியான போதனைக்கு அவசியம் பார்க்கணும்.

தினமலர்

விசுவின் ஜனரஞ்சகமான டைரக்ஷனில், இப்படம் வெறும் பிரசாரமாக இல்லாமல் ரசித்துப் பார்க்கும்படி உள்ளது.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits**
**(Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



# தமிழ் வளர்த்த பெரியார்

ஆராய்ச்சிப் பேரறிஞர்

# மயிலை சீனி வேங்கடசாமி

பேராசிரியர் ம.இரா. தங்கமணி

**த**மிழகம் ஈன்றெடுத்த தவப்புதல்வர்களுள் ஒருவர் ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி. இவர் தனது ஆய்வுத் திறத்தாலும் அயரா உழைப்பாலும் தமிழகத்தின் தலைசிறந்த ஆராய்ச்சியாளர்களுள் முன்னணியில் திகழ்கிறார்.

இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, செப்பேடு, சமயம், கலை, ஆய்வுக் கலை, சொல்லாய்வு, மொழியாய்வு - போன்ற பலதுறைகளில் ஆய்வுகள் செய்து, தனது நுண்மாண் நுழை புலத்தால் இவர் புத்தொளி பாய்ச்சியுள்ளார். தமிழ் இலக்கியம், தமிழ்நாட்டு வரலாறு - ஆகிய இரண்டையும் இவர் தனதிரு கண்களாகப் போற்றினார். எனவே தனது தள்ளாத வயதிலும் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

பள்ளி ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், நூலாசிரியர், ஆய்வாளர், கல்வெட்டறிஞர், கலையியல் வரலாற்றறிஞர் (Art Historian), ஓவியர், கவிஞர், இலக்கிய விமர்சகர், தன்மான இயக்கத் தொண்டர், பேச்சாளர் - போன்ற பல நிலைகளில் புகழுடன் விளங்கிய இவர், பல பட்டங்களையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார். 'பேரவைச் செம்மல்' என்பது இவர் பெற்ற பட்டங்களுள் குறிப்பிடத்தக்கது.

ஆய்விலேயே அமரர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களைப் பற்றி இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டுவது அவசியம். அரை நூற்றாண்டுக்கு மேல் ஆய்வுகள் புரிந்து இவரது வாழ்வும் பணியும், நமக்கெல்லாம் நல்வழி காட்டும் ஒரு ஒளிவிளக்கு.

### இளமை வாழ்க்கையும் கல்வியும்

வரலாற்றுப் புகழ்மிக்க சென்னை மாநகரின் நடுநாயகமாக விளங்குவது மயிலாப்பூர். மயிலை என்பது இதன் சுருக்கப் பெயர். வாழ்க்கைச் சட்டம் வகுத்த வள்ளுவர், இங்குதான் பிறந்தார் என்பர். பண்டு மயிலை ஒரு சிறந்த தமிழ்ப் பண்ணையாகவே விளங்கிற்று. மகாவித்வான் மயிலை சண்முகம் பிள்ளை, மயிலை சீனி. கோவிந்தராசன் - முதலான தமிழறிஞர்கள் மயிலைக்குப் பெருமை சேர்த்தனர். வேங்கடசாமி அவர்களும் மயிலையில்தான் 16.12.1900 -ஆம் நாள் பிறந்தார். தமிழறிஞர் சீனி வேங்கடசாமி அவர்கள் இவரது தமையனார் ஆவார். இளவலான வேங்கடசாமி தனது அண்ணனிடம் தமிழ் பயின்றார். பின்னர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த சற்குணரிடம் தமிழ், ஆங்கில மொழிகளைக் கற்றார். வடமொழி (சமஸ்கிருதம்), பாலி மொழிகளையும் கற்றுத் தேர்ந்த இவர், சில காலம் சென்னை தொழிற்கூடத்திலும் (Madras Trade School) தொழிற் கல்வி பயின்றார். மகாவித்வான் மயிலை சண்முகம் பிள்ளையிடமும் இவர் தமிழ் பயின்றார்.

திருமணம் செய்துகொள்ளாமல் தன் வாழ்நாள் முழுவதும் 'ஆராய்ச்சி' எனும் பெண்ணையே மனைவியாகப் பெற்றார். இளமைக் காலத்திலேயே இலக்கிய வித்தகராத் திகழ்ந்த வேங்கடசாமி, சென்னை நகராட்சிப் பள்ளியில் ஆசிரியராக அமர்த்தப்பட்டார். ஆசிரியப் பணியில் மன நிறைவு கொண்ட இவர், பல அரிய நூற்களைக் கற்பதிலும் ஆய்வு செய்வதிலும் முழு மூச்சுடன் ஈடுபட்டார்.

தன்மான இயக்கத்தில் ஆர்வம் கொண்ட வேங்கடசாமி, பெரியாரின் சுயமரியாதைக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு நீதிக்கட்சியில் சேர்ந்தார்; நீதிக்கட்சி தொடங்கிய 'திராவிடன்' என்னும் பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் பணிபுரிந்தார். இதன் விளைவாக இவர் எழுத்தாற்றலும் சிந்தனைத் தெளிவும் பெற்றார்.

### இலக்கிய, வரலாற்றுப் பணி

ஆராய்ச்சியில் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் முப்பது ஆய்வு நூல்களையும், முன்னூற்று ஐம்பதிற்கும் மேற்ப ஆய்வுக் கட்டுரைகளைம், சில கதைகளையும் கவிதைகளையும் படைத்துத் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார். மற்ற எழுத்தாளர்களைக் காட்டிலும் இவர், பல செய்திகளைப் படம் போட்டு விளக்கிக் காட்டும் ஆற்றல் பெற்றிருந்தார். இளமையில் இவர் கற்ற ஓவியக் கல்வி இவருக்கு உறுதுணையாக விளங்கியது. ஆராய்ச்சி வித்தகர் வேங்கடசாமி அவர்களது படைப்புகளின் சிறப்பு பற்றியும் முக்கியத்துவம் பற்றியும் இவண் காண்போம்.

பேராசிரியர் சற்குணரிடம் கல்வி பயின்ற வேங்கடசாமி, அயல்நாட்டு கிறித்துவப் பாதிரிமார்கள் தமிழுக்குத் தொண்டு புரிந்துள்ளதனைக் கண்டு வியப்புற்றார். எனவே அவற்றை ஆய்ந்து 'கிறித்துவமும் தமிழும்' எனும் நூலை உருவாக்கினார். இந்நூலின் மூலம் இவர், கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக்கெடுக்கும் ஆய்வாளராகத் தமிழுலகிற்கு அறிமுகம் ஆனார். 1930, 1940-களில் இவரது ஆய்வுக் கட்டுரைகள், பல பத்திரிகைகளை அணி செய்தன. அடுத்து மயிலை சீனி அவர்கள் பௌத்த சமயத்தினர் தமிழுக்குச் செய்த தொண்டு பற்றி சீரிய ஆய்வினை மேற்கொண்டார். இதன் விளைவாகத் தமிழுலகம் 'பௌத்தமும் தமிழும்' எனும் அரிய செல்வத்தைப் பெற்றது. அடுத்து 'இறையனார் களவியல் ஆராய்ச்சி' முகிழ்த்தது.

### சமணமும் தமிழும்

சமணர்களின் தமிழ்த் தொண்டும், கலைத் தொண்டும் பௌத்தர்களை விஞ்சி நின்றது. இதனை நன்குணர்ந்த மயிலை சீனி அவர்கள், பலவிதமான சான்றுகளைத் தொகுத்து, பல்லாண்டுகள் நுண்ணிதின் ஆய்ந்து, 'சமணமும் தமிழும்' எனும் அருமையான நூலினைப் படைத்தார் (1954). இவரது அயரா உழைப்பிற்கும், தெளிந்த சிந்தனைக்கும்,

நுண்மாண் நுழை புலத்திற்கும் இலக்கியமாகத் திகழ்ந்த இந்நூல், சமண சமயத்தின் கலைக் களஞ்சியமாகத் திகழ்கிறது. சமணரது கலைப்படைப்புகளைப் படம் பிடித்துக் காட்டும் இந்நூல், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதற் பரிசினையும் பெற்றது.

'மகாபலிபுரத்து சைன சிற்பங்கள்' என்னும் கலைப்படைப்பு, இவரது சிற்ப ஆய்வின் சிறப்பிற்கும் வரலாற்றுப் புலமைக்கும் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும். மகாபலிபுரம் என்று தவறாக வழங்கப்பட்ட பெயரை 'மாமல்லை' என்று அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும். பல்லவரின் வரலாற்றையும், சமுதாய நிலையையும், வெளிப் படுத்தும் வகையில் 'மகேந்திரவர்மன்', 'நரசிம்மவர்மன்', 'மூன்றாம் நந்திவர்மன்' - ஆகிய அரிய நூல்கள் இம் மாமேதையால் வெளியிடப்பட்டன.

பண்டைத் தமிழர் நுண் கலைகளில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர். நுண்கலை, நற்கலை, கவின்கலை என்றெல்லாம் போற்றப் பெறும் அழகுக் கலைகள் ஐந்து வகைப்படும். அவை கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக்கலை, காவியக்கலை என்பனவாகும். தமிழர் வளர்த்த இக்கலைகளை யாவரும் போற்றும் வண்ணம், மயிலையார், இனிய தமிழில் 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்னும் அழகிய நூலை 1967- இல் படைத்து அளித்தார். இது ஓர் கலைப் பெட்டகம். இதன் பெருமையை அறிந்த தமிழக அரசு இதற்கு முதற் பரிசளித்துப் பெருமைப் படுத்தியது.

தமிழகத்தின் சொத்தாக விளங்கிய தமிழ் நூல்கள் பல கால வெள்ளத்தால், கடல் கோளால் அழிந்தன. அழிக்கப் பட்டன. மண்ணுக்குள் மணியென மறைந்து கிடந்த அவைகளின் பெயர்களைத் தொகுத்து 'மறைந்து போன தமிழ் நூல்கள்' (1967) எனும் பெயரில் தனி நூலாக வழங்கினார் வேங்கடசாமி. இவரது 'பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' எனும் நூல் சென்ற நூற்றாண்டில் படைக்கப்பட்ட இலக்கியங்களையும் பட்டியல் போட்டுக்காட்டி, அவற்றின் சிறப்பையும் உணர்த்துகின்றது.

கல்வெட்டுக்களில் புதைந்து கிடந்த வரலாற்றுப் புகழ்மிக்க இனிய பாடல்களைத் தொகுத்து, ஆய்வுக் குறிப்புகளுடன் 'சாசனக் கவிதை மஞ்சரி' எனும் நூலாக வெளியிட்ட பெருமையும் வேங்கடசாமியைச் சாரும். இவை வரலாற்று ஆய்விற்குப் பெரிதும் பயன் படுகின்றன. இவரது 'சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்' (1970) எனும் நூல், தாமரை மலரின் வடிவில்



**★ கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி உரிமைகளைப் பெற்றிடுவோம்! அமைதியும், ஒற்றுமையும் காத்து வளர்ச்சிக்கு வழி வகுப்போம்! புதிய சமத்துவ சமதர்ம அமைப்புக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்!**

அமைந்த மதுரை மாநகரின் அமைப்பையும் சிறப்பையும் படம் போட்டு விளக்குவதுடன் பல புதிய வரலாற்றுச் செய்திகளையும் பதிவு செய்துள்ளது. பண்டைத் தமிழரின் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகச் சிறப்பு, தமிழ்நாட்டுத் துறைமுகங்கள், ஏற்றுமதி, இறக்குமதி முதலான பல அரிய செய்திகளை, அயல் நாட்டார் குறிப்புகளின் அடிப்படையில் படம் பிடித்துக் காட்டுவது இவரது 'பழங் காலத் தமிழர் வாணிகம் (சங்க காலம்) (1974) எனும் ஆய்வு நூல்.

இவர் பல தலைப்புகளில், பல காலங்களில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் 'அஞ்சிறைத் தும்பி' எனும் பெயரில் வெளியிடப்பட்டது. சங்க காலத்தை அடுத்து வந்த, இருண்ட காலமாகக் கருதப்பட்ட களப்பிரர் காலம் பற்றியும் இவர் சீரிய ஆய்வுகள் மேற்கொண்டார். இவ்வாய்வுகள் 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' எனும் நூலாக மலர்ந்தது. களப்பிரர் வரலாற்றிற்கு இது ஓர் அதிகாரபூர்வமான நூலாகத் திகழ்கிறது.

1977-இல் இவரால் படைக்கப்பட்ட 'இசைவாணர் கதைகள்' எனும் நூல் 13 புராணக் கதைகளையும் 5 வரலாற்றுக் கதைகளையும் கொண்டுள்ளது. எங்கெங்கோ மறைந்து கிடந்த இக்கதைகளை இவர் புதுவடிவத்துடன் படைத்துள்ளார். இது ஓர் புதுமையான நூல்.

'கொங்கு நாட்டு வரலாறு' எனும் இவரது அரிய ஆய்வுநூல், கொங்கு நாட்டு வரலாற்றில் புத்தொளி பாய்ச்சி நிற்கிறது. இதில் பழைய கருத்துகள் பல மறுக்கப்பட்டுள்ளன. கரூர் வட்டத்தில் உள்ள புகலூர் (ஆறுநாட்டார் மலை) சமணக் கல்வெட்டுகள் புதிய கோணத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. சங்கச் சேரரின் தலைநகர் தமிழ்நாட்டின் கரூரா? என்பது குறித்து, காய்தல் உவத்தல் இன்றி அணுகி பல புதிய செய்திகளை வழங்கியுள்ளார். கொங்கு நாட்டின் அரச வம்சங்கள் பற்றி இவர் தெள்ளிதின் ஆய்ந்துள்ளார். 1970-இல் தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவின் உறுப்பினராக அமர்த்தப்பட்ட வேங்கடசாமி, தமிழக வரலாற்றிற்குப் பல அருமையான ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். வரலாற்றுக் குழுவிற்கு கட்டுரை வழங்கியவருள் நானும் ஒருவனாக இருந்ததால் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்போது அவருடைய ஆராய்ச்சித் திறனை அறிந்து வியந்தேன்.

**பாராட்டுகள்**

ஆராய்ச்சிப் பேரறிஞர் சீனி அவர்கள் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும், தமிழகப் புலவர் குழு உறுப்பினராகவும் அரும்பணி ஆற்றியுள்ளார். தமிழ் எழுத்தாளர் சங்கம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், சென்னை சைன சங்கம், தமிழக அரசு - ஆகியன இவரது ஆராய்ச்சித் திறனைப் போற்றிப் பட்டங்களும் கேடயங்களும் வழங்கியுள்ளன. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் இவரது உயர் பண்புகளையும், ஆய்வுத் திறனையும்,

அஞ்சுதல் அறியாநெஞ்சன்
அகல்வர லாறனைத்தும்
மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்''

''தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்க்கெட லாற்றா அண்ணல்
வேங்கடசாமி என்பேன்
விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப் பணியாய்க் கொண்டோன்''

- என்று பாராட்டியதுடன் இவரது தமிழ்ப்பற்றைச் சுட்டிக்காட்ட மறக்கவில்லை.

தன்னலங் கருதாது, தமிழக வரலாற்றிற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் அருந்தொண்டு புரிந்த இம்மாமேதை 8.5.1980-இல் தமது எண்பதாவது வயதில் காலமானார்.

இவரது பூத உடல் மறைந்தாலும் புகழுடல் மறையவில்லை. எளிய, இனிய பண்பும், காய்தல் உவத்தல் அற்ற ஆய்வுத் திறனும், அயர்ச்சியுற்ற முயற்சியும், நேர்மையும், எவருக்கும் அஞ்சாது தனது கருத்தை எடுத்துரைக்கும் மனத்திண்மையும் கொண்ட ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலாவிட்டாலும், பல்கலைக் கழகங்கள் போற்றும் வண்ணம் உயரிய ஆய்வுகளை மேற்கொண்டவர். பல்கலைக் கழகங்களே செய்ய முடியாத ஆய்வுகளைத் தன்னந்தனியாக, பிறர் நிதி உதவியின்றி, சொந்தப் பணத்தில், சொந்த உழைப்பில் மேற்கொண்டவர். இவரது ஆய்வும் உழைப்பும் வாழ்வும் வழியும் நமது முன்னேற்றத்திற்கான உயிரூட்டி ஒளியூட்டியாக விளங்குகின்றன.

# எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி




அமரர் எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி சென்னை - கத்திபாரா சந்திப்பில் பண்டித நேருவின் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி ஆகும்.

சென்னையில் அமைக்கப்பட்டுள்ள நேரு சிலையைப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த விழாவில் தலைமை தாங்கிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசியதாவது:-

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே! மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களே! திருமதி சோனியாகாந்தி அவர்களே! மாண்புமிகு மத்திய-மாநில அமைச்சர் பெரு மக்களே!

இன்று சரித்திரம் காணாத மாபெரும் விழா வில் கலந்துகொண்டு உங்கள் எல்லோரையும் காண்பதில் பிரதமரும் நானும் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

நமது முதல் பிரதமரும் ஆசிய ஜோதியுமான அமரர் நேரு அவர்களின் திருஉருவச் சிலை இங்கு திறந்து வைக்கப்பட இருக்கிறது. இந்தச் சிலையைத் திறந்து வைக்க வந்து இருக்கும் நமது பிரதமரும் நேரு அவர்களின் பேரனுமாகிய திரு. ராஜீவ் காந்தி அவர்களை நான் வாழ்த்தி வரவேற்கிறேன்.

சென்னையில் நேரு அவர்களின் முழு உருவச் சிலை வைக்கவேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் விரும்பினார்கள். அந்த நீண்ட நாளைய விருப்பம் இன்று நிறைவேறி உள்ளது.

நேரு அவர்களின் குடும்பம் வழிவழியாக நமது நாட்டின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் முக்கியப் பங்கு ஆற்றி வருகிறது.

நாட்டின் விடுதலைக்காகவும், வளர்ச்சிக்காக வும், இந்தத் தியாகப் பரம்பரை ஆற்றியுள்ள தொண்டு உலகமே நன்கு அறிந்த ஒன்று.

சுதந்திர இந்தியாவைப் படைத்த கைதேர்ந்த சிற்பி நமது நேரு அவர்கள், 20-ஆம் நூற்றாண் டின் ஈடு இணையற்ற தலைவராக விளங்கியவர்.

இந்தியாவின் நல்ல எதிர்காலமே தமது மூச்சாகக் கொண்டு பாடுபட்டவர். அணிசேராக் கொள்கையை உலக நாடுகளுக்கு அளித்த உன்னதத் தலைவர் அமரர் நேரு அவர்கள். நமது நாட்டின் இன்றைய அறிவியல், விஞ்ஞான மருத்துவத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அடி கோலியவர் நேரு.

அவருக்குப் பின் அவரது புதல்வியார் திருமதி இந்திரா காந்தி அம்மையாரும், அவர் வழியில் நின்று அவரது கனவுகளைத் தொடர்ந்து நிறை வேற்றி வந்தார்.

நமது நாட்டின் வளர்ச்சியைக் கண்டு, வளர்ந்த வல்லரசு நாடுகளே ஆச்சரியப்பட்டு மதிக்கும் வகையில் நாட்டின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டியவர் இந்திரா காந்தி அம்மையார்.

அவர்கள் இருவரின் பாதையைப் பின்பற்றி நமது பெருமைக்குரிய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் சரித்திரம் படைத்துக்கொண்டு இருக் கிறார். வளரும் நாடுகள் - அணி சேரா நாடுகள் - தெற்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்புத் தலைவராக இருந்து உலகுக்குப் பல அரிய தொண்டுகள் ஆற்றி வருகிறார். நாட்டின் வளர்ச்சியில் தன்னுடைய முழுக் கவனத்தையும் அக்கறையையும் செலுத்தி அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறார்.

அமைதி, ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஜாதி, மத, பேத மற்ற சமுதாயம் இவற்றை உருவாக்க அரிய தொண்டு ஆற்றி வருகிறார் நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்.

அமரர் நேரு அவர்களின் திருஉருவச்சிலை யைத் திறந்து வைக்க நமது பிரதமர் ராஜீவ் காந்திதான் மிகவும் பொருத்தமானவர். நேரு, இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி இவர்களின் தியாகத்தையும், சேவையையும் இந்த உலகம் உள்ளவரை நாட்டு மக்களும் போற்றுவார்கள்.

திரு. ராஜீவ் காந்தி அவர்களது குடும்பம் தழைத்து ஓங்கி நலத்துடன் வாழ வேண்டும். தொடர்ந்து நாட்டுப் பணியில் ஈடுபட்டு நமது நாட்டை உலகின் தலைசிறந்த நாடாகத் திகழச் செய்ய வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறு கிறேன்.

இந்த உயிரோட்டம் உள்ள அற்புதச் சிலையை உருவாக்கிய மணிநாகப்பா அவர்களுக்கு என் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் உளமாரத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வாழ்க நேருவின் புகழ்! அண்ணா நாமம் வாழ்க! நன்றி, வணக்கம்.**

**- மேற்கண்டவாறு டாக்டர் எம்.ஜி.ஆர். பேசினார்.**



## என் இதயக்கனி

**'எம்.ஜி.ஆருக்கும், எனக்கும் இருக்கிற தொடர்பை நாடு அறியும். எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது என்னை நானே பாராட்டிக் கொள்வதாகக் கருதப்படும். உண்மை தானே! எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கியுள்ள கொள்கை எது என்பதை நாடு அறியும். முல்லைக்கு மணம் உண்டு என்பதைக் கூறவா வேண்டும்? இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர் பார்த்தனர். அது என் மடியில் வந்து விழுந்தது. என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்.''**

- பேரறிஞர் அண்ணா
('நாடோடி மன்னன்' வெற்றி விழாவில் பேசியது, *1958.)*

## குணத்தில் தங்கம் - கொதித்தால் சிங்கம்!

எனது அருமைத் தம்பி எம்.ஜி.ஆரின் உருவம் சிறியது. ஆனால் உள்ளம் பெரியது. அவர் கழகத்தின் கண்மணி - கலை உலகத்தின் நன்மணி - குணத்தில் தங்கம் - கொதித்தால் சிங்கம்.

- பேரறிஞர் அண்ணா
*('சமநீதி' மலர், 1968)*

## வள்ளலுக்கெல்லாம் வள்ளல்!

புயல் மழையால் சேதம் வரும் இடங்களில் எல்லாம் எங்கள் புரட்சி நடிகர் உதவியினைக் காணலாம்.

**தன்னைத் தேடி வருகிறவரின் கண்ணீரைத் துடைக்கிறவன் வள்ளல். தன்னைத் தேடி வருகிறவரின் துன்பத்தைப் போக்குகிறவன் வள்ளல். ஆனால் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அப்படியல்ல; சமுதாயத்தில் துன்பப்படுகிறவன் எங்கேயிருக்கிறான் என்று தேடிப் போய் அவன் கண்ணீரைத் துடைத்து கைகொடுக்கிற எம்.ஜி.ஆர். வள்ளலுக்கெல்லாம் வள்ளல்.**

**- பேரறிஞர் அண்ணா.**
***(1961 ரிக்ஷா தொழிலாளருக்கு மழைக்கோட்டு வழங்கும் விழாவில்)***

## திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்

# நலிந்தோர் வளம்பெற நல்வாழ்வுத் திட்டங்கள்



**வ**றுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களை வறுமைக்கோட்டைத் தாண்டி வாழ வழிவகை செய்யும் திட்டமே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகும். இத்திட்டத்தில், நலிவுற்றோருக்குத் தொழில் தொடங்க, கறவை மாடுகள், ஆடுகள், கோழிப்பண்ணை ஆகிய தொழில்களைச் செய்து வாழ்வில் வளம் பெறக் கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில், ஆதிதிராவிட வகுப்பினர், உடல் ஊனமுற்றோர், மகளிர் மேம்பாட்டுத் திட்டக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் கடனில் 50 சதவிகித மானியம் ரூ.5,000-க்கு மிகாமல் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு, அளிக்கப்படும் கடனில் மானியம் 1/3 பங்கு அளிக்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டு மொத்தம் 6,690 பயனாளிகளுக்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு, 7,109 பேர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு, வழங்கிய தொகையில் ரூ.168.796 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டாகிய 1992-93-இல் 5,573 பேருக்குக் கடனுதவி வழங்கி, அதன்பேரில் மானியமாக ரூ.160.761 இலட்சம் அளிக்கத் திட்டம் இடப்பட்டு, இதுவரை 2,900 பேருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் சிறப்பு அம்சமாகப் பட்டு வளர்ப்பு, பட்டு நூல் எடுத்தல்



> கலைத்துறையில் அவருக்கிருந்த ஆழ்ந்த பற்று காரணமாகக் கடும் உழைப்பினால் - நல்ல பண்புகளினால் படிப்படியாக முன்னேறி முதன்மையான ஸ்தானத்தைப் பெற்றவர் எம்.ஜி.ஆர்.
>
> - முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலம்.

முயல் வளர்ப்பு ஆகிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

பட்டு வளர்ப்பில் சுமார் ½ ஏக்கரில் முசுக் கொட்டைச் செடி வளர்த்து, அதில் பட்டுப் பூச்சி களை வளர்த்தால், அவர்களுக்குக் கடனாக ரூ.6,950 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை நன்முறையில் செயல்படுத்த பயனாளிகள் அனை வருக்கும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2 மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தின்போது மதிப்பூதியமாக நபர் ஒன்றுக்கு மாதம் ரூ.300 வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் மொத்தம் 600 பேருக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டு, தற்போது சுமார் 400 பேருக் குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நவம்பர் மாத இறுதிக்குள் முடிவுற்று, பயிற்சி பெற்ற அனைவருக்கும் கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் பட்டு நெசவு உற்பத்தி செய்யும் ஆரணி நகருக்குத் தேவைப்படும் பட்டு நூலினை நமது மாவட்டத்திலேயே தயாரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இம்மாவட்டத்தில் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு கர்நாடக மாநிலத்திற்குக் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது. பட்டுக் கூடுகளிலிருந்து நூல் தயார் செய்யப்பட்டு, மீண்டும் ஆரணிக்குக் கொண்டுவரப்பட்டு, நெசவு செய்யப்படுகிறது. இந்த நிலையைப் போக்கிட, பட்டு நூல் உற்பத்தி செய்ய, இந்த ஆண்டு சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 100 பேருக்குப் பட்டு நூல் தயாரித்தலில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு, முன்னோடியாக, திருவண்ணாமலையை அடுத்துள்ள ஆணாய்ப் பிறந்தான் கிராமத்தில் அன்னை பட்டு நூல் உற்பத்தி நிலையத்தில் தற்போது 10 பெண்களுக்குப் பயிற்சியளித்து, பயிற்சி முடிவுற்றபின் மாவட்டத்திற்குத் தேவை யான பட்டு நூல் நம் மாவட்டத்திலேயே தயாரா கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

இம்மாவட்டத்தில் நிலவி வரும் பருவ நிலை யைக் கருத்தில் கொண்டு, முயல் வளர்ப்புத் திட்டம் முதல்முதலாக, துரிஞ்சாபுரம் ஒன்றியம், காரியந்தல் கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ளது. முயல் வளர்க்கும் மனப்பாங்குள்ளவர்களுக்கு, சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2 மாதம் பயிற்சி அளித்து, பயிற்சி முடிந்தவுடன் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கடன் மற்றும் மானியம் வழங்கி, அவர்களுடைய வாழ்க் கைத் தரத்தை உயர்த்திட ஏற்பாடுகள் செய்யப் பட்டு, தற்போது 20 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. திட்டத்திலும் சுமார் 100 பேருக்குப் பயிற்சி அளித்து, முயல் வளர்ப் புத் தொழிலை முன்னேற்றம் அடையச் செய்ய வழிவகை செய்யப்படும். இங்கு வளர்க்கப்படும் முயல்கள் சென்னை மற்றும் திருவண்ணாமலை யில் விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது, சென்னையிலிருந்து வரும் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிருப்பினும், நாளடைவில் இத்தேவையினைப் பூர்த்தி செய்ய இயலும் என எதிர்பார்க்கலாம்.

### சாண எரிவாயுத் திட்டம்

விறகுக்காகக் காடுகளை அழிக்கும் நிலையை மாற்ற, மாற்று எரிசக்தியாகச் சாண எரிவாயுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சாண எரிவாயுத் திட்டத்தின்கீழ் இம்மாவட் டத்தில் 1991-92-ஆம் ஆண்டில் 255 கலன்கள் கட்டி, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1992-93-ஆம் ஆண்டிலும், மேற்படி நிறுவனங் களின் மூலம் 350 கலன்கள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பணிகள் முனைப்புடன் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த மாவட்டத்தில் சாண எரிவாயு தொழில் நுட்பப் பிரிவு இல்லாத பொழுதும், டான்கி முகவர்களின் துணை கொண்டு பழுதடைந்துள்ள 595 சாண எரிவாயுக் கலன்களைப் பழுது நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இம்மாவட்டத்தில் சாண எரிவாயுத் திட்டத் தினைத் திறம்படச் செயல்படுத்தும் விதமாக அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், தொகுப்புக் கிராம அடிப்படையில் கிராம மக்கள் தேர்வு செய்யப்பட்டு அதில் வங்கி அலுவலர்கள் துணை யுடன் கூட்டங்கள் நடத்தி தகுதியான, விருப்பம் உள்ள பயனாளர்களை அந்த இடத்திலேயே தேர்வுசெய்து வங்கி அலுவலர்கள் ஒப்புதலையும் பெற்று சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதுவரை 758 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கக் கோரும் கடன் மனுக்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் 218 மனுக்களுக்குக் கடன் வழங்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 196 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர சொந்த முதலீட்டில் கலன் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் 50 கலன்கள் சொந்த முதலீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இது போன்ற மற்ற ஊராட்சி ஒன்றியங்களிலும் சொந்த

முதலீட்டில் கலன்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மற்றும் 40 ஒருநாள் பயனாளர்கள் பயிற்சி முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டு இதுவரை 26 பயனாளர்கள் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள் ளன. இந்தப் பயிற்சி முகாம்களில் 1,300 பய னாளர்கள் பங்குகொண்டு உள்ளனர். இதற்கு ரூ.19,500 செலவிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் சாண எரிவாயு மானியமாக 255 கலன்களுக்குரூ.6.2 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு இலக்கினை இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கும் பயனாளர்களை ஊக்குவிக் கும் பொருட்டு அரசு மானியத் தொகை வழங்கு கிறது.

**சூளா அடுப்புகள்**

கிராமங்களில் கிடைக்கும் எரிபொருளைச் சரியான விதத்தில் பயன்படுத்தும் வகையில் 1991-92-ஆம் ஆண்டில் சூளா திட்டத்தின் கீழ் நிலையான மற்றும் போர்ட்டபுள் சூளாக்கள் மொத்தம் 5,000 அமைக்கப்பட்டன. 1992-93-ஆம் ஆண்டில் 4,000 சூளா அடுப் புகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 1,200 அடுப்புகள் போர்ட்டபுள் வகை யினையும், 2,800 அடுப்புகள் நிலையான வகை யினைச் சேர்ந்ததுமாகும். சூளா அடுப்புகளுக்குக் கீழ்க்கண்ட வகையில் பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

நிலையானது .. ரூ.50
போர்ட்டபுள் (எஸ்சி/எஸ்டி.
பயனாளிகளுக்கு .. ரூ.75
மற்றவர்களுக்கு ரூ.50

இத்திட்டத்தின் கீழ் சுயதொழில் பணி யாளர்கள் களப்பணியாளர்கள் மற்றும் பயனாளர் களுக்கு, கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக் கழ கத்தினைச் சேர்ந்த உயர்சக்தித் துறையினர் மூலம் பயிற்சி நடத்தப்பட உள்ளது. சூளா அடுப்பு களைத் தொகுப்பு வீடுகளில் கட்ட முதன்மைக் கவனம் செலுத்தப்படுகிறது.




**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஆண்டு முழுவதும் அளித்து, அவர் களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்பாடு செய்ய வும், கிராமப்புறங்களில் தேவையான நிரந்தரச் சொத்துக்களை ஏற்படுத்தவும் இத்திட்டங்கள் வழிகோலுகின்றன.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 1991-92**

ரூ.1146.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு, ரூ.1139.67 இலட்சம் செலவிடப்பட்டது. தொகுப்பு வீடுகள் 3,000 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள் 74, ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் 91 மற்றும் ஊராட்சிப் பள்ளிக் கட்டடங்கள் 38 ஆகியவை கட்டி முடிக் கப்பட்டுள்ளன. 106.7 கி.மீ. நீள 83 கப்பிச் சாலைகளும், 77.83 கி.மீ. நீள 79 தார்ச் சாலை களும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. 1,278 ஊராட்சிகளுக்குத் தேவைப்படும் வேலைகளும் முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 800 ஜீவன்தாரா கிணறுகளும், 'தாட்கோ' மூலமாக 200 கிணறுகளும் ஏற்படுத்தி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடாக ரூ.419.09 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இது வரை மொத்தம் 352 கிணறுகள் கட்டி முடிக்கப் பட்டு, ரூ.252.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 1992-93**

நடப்பு ஆண்டில், 34 பள்ளிக் கட்டடங்கள் ரூ.40.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய் யப்பட்டு, பணிகள் அனைத்தும் முன்னேற்றத்தில் உள்ளன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையக் கட்டடங்கள் 72 ரூ.48.24 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

76.54 கி.மீ. நீளச் சாலைப் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 76.54 கி.மீ. நீளக் கப்பிச் சாலைகள் போடப்பட்டு, பணி முடிக்கப்பட்டு, தார் அமைக்கத் தயார் நிலையில் உள்ளன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 1991-92, 1992-93-ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பல துறைகள் மூலமாக ரூபாய் ஒரு கோடி அளவிற்குப் பல திட்டங்கள் நிறை வேற்றப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 1991-92**

47 சத்துணவுக் கூடங்கள் ரூ.29.100

இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

11 பள்ளிக் கட்டடங்கள் ரூ.35.58 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

43 சிறுபாசன ஏரிகள் ரூ.18.20 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

44 கசிவு நீர்க் குட்டைகள் ரூ.55.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

39 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.5.41 இலட்சம் செலவில் ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

ரூ.91.20 இலட்சம் செலவில் 30.40 கி.மீ. நீளத்திற்கு 11 சாலைப் பணிகள் மேம்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ரூ.297.377 இலட்சம் செலவில் 208 குடிநீர் வழங்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.127.480 இலட்சம் செலவில் 8,934 தெரு விளக்குகள் (குழல்) பொருத்தும் பணிகள் மேற் கொள்ளப்பட்டு, முடியும் தறுவாயில் உள்ளன.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 1992-93**

35 கசிவு நீர்க் குட்டைகள் ரூ.49 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

ரூ.13.24 இலட்சம் செலவில் 28 சிறுபாசன ஏரிகள் தரப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு, நடைபெற்று வருகின்றன.

மேலும், ரூ.213.10 இலட்சம் மதிப்பீட்டில் 71.7 கி.மீ. நீள கிராமச் சாலைகள், ரூ.71.40 இலட்சம் மதிப்பீட்டில் 23.80 கி.மீ. நீள பேருந்துச் சாலைகள், மற்றும் சிறப்பு உறுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.58.20 இலட்சம் மதிப்பீட்டில் 19.40 கி.மீ. நீளச் சாலைகள் ஆகிய பணிகள் மேற்கொள்ள நிர்வாக அங்கீகாரம் பெறப்பட் டுள்ளது.

**சமூகக் காடுகள் திட்டம் 1992-93**

நடப்பு ஆண்டில் 21.123 இலட்சம் நாற்றங் கால் உற்பத்தி செய்து 1980.50 ஏக்கரில் வட்டார நடவுக்கும், இடைவெளி நடவுக்கும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, அதில் 1880.50 ஏக்கர் வட்டார நடவுகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நாற்றங்கால்களும் நடவுக்களம் இத்திங்களில் முடிக்கப்படும். இந்த ஆண்டு இதற்கான நிதி ஒதுக்கீடாக ரூ.33.185 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் இதுவரை 19.087 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய முயற்சியாக ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு சாலையோரப் பூங்காவும், பழத்தோட்டமும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஜீவன்தாரா கிணறு பயனாளிக்கும் குறைந்தது 100 தேக்குமரக் கன்றுகள் அளித்திட வும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா)**

இத்திட்டம் செங்கம், ஜவ்வாது, வந்தவாசி, மற்றும் தெள்ளார் ஊராட்சி ஒன்றியங்களில் 38 குழுக்கள் அமைக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

> ★ **வன்முறைதான் போராட்ட முறை என்றால், தோல்விதான் அதற்குப் பரிசாகக் கிடைக்கும் என்பது நிச்சயம்.**
>
> டாக்டர் எம்.ஜி.ஆர்.

கூடை முடைதல், தென்னங்கீற்று தயாரித்தல், பாசிமணி தயாரித்தல், புளி பதப்படுத்துதல், சாக்பீஸ் தயாரித்தல், காகித உறைகள் தயாரித்தல் மற்றும் சோப்பு தயாரித்தல், மிளகாய்ப்பொடி தயாரித்தல் ஆகிய பணிகளில் 633 மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

கிராமப்புற படித்த ஆண், பெண் இளைஞர் களுக்குச் சுய வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் பயிற்சி வழங்கும் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில் 573 நபர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு உள்ளது. 237 நபர்களுக்கு 14.11.92 அன்று பயிற்சி முடிவடைகிறது. பயிற்சி முடித்த 573 நபர்களில் 380 நபர்கள் எஸ்.சி. பிரிவினர் 48 நபர்கள் எஸ்.டி. பிரிவை யும், 51 நபர்கள் பெண்கள் பிரிவையும் சேர்ந்த வர்கள். பயிற்சி பெற்றுவரும் 237 நபர்கள் 64 நபர்கள் எஸ்.சி. பிரிவையும் 95 நபர்கள் பெண்கள் பிரிவையும் சேர்ந்தவர்கள். இதுவரை 234 நபர்கள் சுய தொழில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். ஊதிய அடிப்படையில் 199 நபர்கள் பயனடைந்து வருகின்றனர்.

1992-93-ஆம் ஆண்டில் 1,292 நபர்களுக்குப் பயிற்சி வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது. பயிற்சி வழங்க 15 தொழில் பிரி வுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தொழில்களுக்கு ஏற்றவாறு 2 மாதம் முதல் 12 மாதம் வரை பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

இதில் செயற்கை வைரம் பட்டைத் தீட்டுதல் மற்றும் முயல் வளர்ப்புப் பயிற்சி இந்த ஆண்டு முதல் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பயிற்சி மொத்தம் இரண்டு மாதம் முதல் ஓராண்டுக் காலம் வரை உடையது. பயிற்சி வழங்க 3 அரசுத் துறை நிறுவனங்கள், 9 தனியார் துறை, 12 ஊராட்சி ஒன்றியங்கள், பட்டுவளர்ப்புத் துறை, இரண்டு சேவை நிறுவனங்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1,292 நபர்களுக்குப் பயிற்சியினை நடத்த ரூ.19.40 இலட்சம் நிதி யாகக் கோரப்பட்டது. அதில் 1992-93-ஆம் ஆண்டிற்கு 867 இலட்சம் ரூபாய் பெறப் பட்டுள்ளது. இதுவரை 763 நபர்கள் பயிற்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**பா. நாராயணமூர்த்தி**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்

# ஆசிய பசிபிக் நாடுகள் மாநாடு: சிறுநீரகச் சிகிச்சையில் தமிழகத்திற்கு முதலிடம்

**டாக்டர் எம்.ஏ. முத்துசேதுபதி**
தலைவர் மற்றும் பேராசிரியர்
சிறுநீரக இயல்துறை
சென்னைப் பொது மருத்துவமனை

**தி**ல்லியில், 1992 டிசம்பர் திங்கள் 9 முதல் 13 வரை ஆசிய பசிபிக் நாடுகளின் சிறுநீரக இயல் காங்கிரசின் ஐந்தாவது மாநாடு நடைபெற்றது. இதில் 500-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன. சென்னை அரசு பொது மருத்துவமனை சிறுநீரக இயல்துறையின் மூலம் கீழ்க்காணும் ஏழு ஆய்வுக் கட்டுரைகள் இம் மாநாட்டில் வழங்கப்பட்டன. அவை:

1. திடீர் சிறுநீரகச் செயலிழப்பு- 284 நோயாளிகள் பற்றிய ஆய்வு.

2. சென்னை நகரில் லெப் டோஸ்பைரோஸில் - சர்வதேச ஒத்துழைப்பு ஆய்வு.

3. சிறுநீரக அளவை வெவ்வேறு முறைகளில் ஆய்வு.

4. இரத்த ஓட்டக் குறைவினால் ஏற்படும் சிறுநீரகச் செயலிழப்பு.

5. பாலிசிஸ்டிக் சிறுநீரக நோய்- நான்கு ஆண்டு ஆய்வு.

6. எல்கேட் - குறைவினால் வரும் சிறுநீரகச் செயலிழப்பு - இந்தியாவிலிருந்து முதல் நோயாளி பற்றிய அறிவிப்பு.

7. அரசு முழு உதவி வழங்கும் - சிறுநீரக மாற்றுச் சிகிச்சை முறை - சிறுநீரகத் தானம் வழங்குவோர் பற்றிய ஆய்வு.

மாநாட்டில் வழங்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளில் மிகச் சிறந்தவை என 6 கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஜப்பான், நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, தைவான் ஆகிய நாடுகள் தலா ஒரு பரிசைத் தட்டிச் சென்றன. இந்தியாவுக்கு 2 பரிசுகளும் வழங்கப் பட்டன.

இந்தியாவுக்குக் கிடைத்த 2 விருதுகளும் சென்னை அரசினர் பொது மருத்துவமனை சிறுநீரக இயல்துறை சார்ந்த மருத்துவர் களுக்குக் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது தமிழகத்தின் தன்னிகரற்ற சாதனை என்றே கூறலாம். இந்திய அரசு நல்வாழ்வுத் துறைச் செயலர் திரு. மிஸ்ரா இவ் விருதுகளை வழங்கினார்.

பரிசு பெற்ற முதலாவது கட்டு ரையான, அரசு முழு உதவி வழங் கும் சிறுநீரக மாற்றுச் சிகிச்சையில் -

ஆசிய பசிபிக் நாடுகளின் சிறுநீரக இயல் ஐந்தாவது மாநாட்டில், இந்திய நல்வாழ்வுத்துறைச் செயலர் திரு எல்.என். மிஸ்ரா அவர்கள், சென்னை அரசினர் பொது மருத்துவமனை சிறுநீரக இயல்துறை டாக்டர் பத்மநாபன், டாக்டர் எம். ஜெயகுமார் ஆகியோருக்கு விருதுகள் வழங்குகிறார். உடன் இருப்பவர் சிறுநீரக இயல் நிபுணர் டாக்டர் கே.எஸ். சுஹா.



# மலரும் புத்தாண்டு

புத்தாண்டே வருவாய்! புதுவாழ்வு தருவாய்!
புவிதனிலே என்றும் அமைதிதனை அருள்வாய்!
எத்திசையும் சமத்துவ வித்தொன்றே விதைப்பாய்!
எல்லோரின் மனதிலும் அன்பொன்றே வளர்ப்பாய்!
சத்தியங்கள் மட்டும் வெல்லவழி புரிவாய்!
சாதியெனும் பேய்தனை சாம்பலெனச் செய்வாய்!
முத்தமிழின் ஓசை இசைபாடப் பூப்பாய்!
முக்கனியின் சுவைபோல் வாழ்வுதனை அளிப்பாய்!

தீயவைகள் அழிய தீயெனவே பிறப்பாய்!
தீதுநிறை மனத்தின் கயமைகளை அறுப்பாய்!
தூயநெறி பிறக்கவே துள்ளியோடி வருவாய்?
துன்பங்கள் அகலவே இன்கதிராய் உதிப்பாய்!
நேயமுடன் நீதான் நாடியிங்கு வருவாய்!
நாமிருக்கும் பாரதம் நீடுயர துதிப்பாய்!
மாயங்கள் மடியவே மகாத்மாவின் பாதையில்,
மலர்ந்தேநீ வருவாய்! வசந்தங்கள் தருவாய்!

மல்லை. கவிக்கதிர்



சிறுநீரகத் தானம் வழங்குவோர் பற்றிய ஆய்வு என்ற கட்டுரையில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை முற்றிலும் இலவசமாக நடந்து வருவதை எடுத்துக் காட்டுவதாகும். அடுத்த கட்டுரை கொழுப்புச் சத்து சார்புடையதாகும்.

இந்தியாவில் முதன் முறையாக இந்நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் 1987 ஜூலையில் இருந்து இதுவரை 221 பேருக்கு சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களில் 88 சதவிகிதம் பேர் நலமாக உள்ளனர்.

சிகிச்சைக்கு வருவோர் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருவதால், 4-இல் இருந்து தற்போது 6 அறுவைச் சிகிச்சைகள் ஒவ்வொரு மாதமும் செய்யப்படுகின்றன. சிகிச்சைக்கு வருபவர்களுக்குச் செயற்கை முறையில் ரத்தத்தைச் சுத்தம் செய்யும் 'டயாலிசிஸ் சிகிச்சை, சிறுநீரகம் தானம் அளிப்பவர்களுக்காக மருத்துவப் பரிசோதனை மாற்று சிறுநீரக அறுவைச் சிகிச்சை, சிகிச்சைக்குப் பிறகு மாதந்தோறும் தேவையான மருந்துகள் அளிப்பது ஆகிய அனைத்துமே இங்கு இலவசமாகச் செய்யப் படுகின்றன.

இத்தகைய ஒட்டு மொத்த இலவசச் சிகிச்சை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் மட்டுமின்றி, அகில உலகத்தில் வேறெங்கும் கிடையாது.

சென்னை அரசினர் பொது மருத்துவமனை, சிறுநீரகப் பிரிவில் ஆண்டுதோறும் சராசரியாகப் புற நோயாளியாக 9000 பேரும், உள் நோயாளியாக 2000 பேரும் சிகிச்சை பெறுகிறார்கள்.

இத்துறை 1987-இல் இருந்து இதுவரை நடைபெற்ற அனைத்து அகில இந்திய, தென்னிந்திய சிறுநீரக வல்லுநர்களின் மாநாடுகளில் 50-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ளது. அவற்றில் 1989 - 1990 ஆம் ஆண்டு தென்னிந்திய சிறுநீரக வல்லுநர்கள் மாநாட்டில் இப்பிரிவு தங்கப்பதக்கங்களையும் பெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளது, மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

# சிவகங்கை கிராபைட்

ஏ.என். தியானேஸ்வரன், இ.ஆ.ப.,
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
கனிம நிறுவனம்

**கி**ராபைட் என்ற கனிமம் படிக வடிவம் கொண்ட கரியாகும். இது மிருதுவானது, அதிக வெப்பத்தைத் தாங்கக் கூடியது, சிறந்த மின் கடத்தி. எந்த வெப்பத்திலும், அழுத்தத்திலும் வேதியல் மாற்றம் அடையாது. கரியைச் சார்ந்த மற்றொரு படிக வடிகம் வைரம் ஆகும். இவ்விரண்டும் வெவ்வேறு வெப்ப அழுத்த நிலையில் உண்டாகின்றன.

உலகத்தில் கிராபைட் கனிமம் ஆசியாவிலும் மற்றும் ஆப்பிரிக்காவிலும் அதிக அளவில் படிவமாக அமைந்திருக்கிறது. தொழில் துறையில் முன்னேறியுள்ள நாடுகளில் மிகக் குறைந்த அளவிலே (7 சதவிகிதம்) அமைந்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் உலகத்தில் 6.6 இலட்சம் டன் கிராபைட் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் செறிவூட்டப்படாத கிராபைட் படிவங்களும் அடங்கும். இந்தப் படிவங்களில் கிராபைட் 10 முதல் 30 சதவிகிதம் வரையிருக்கும். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 30,000 டன் கிராபைட் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றில் 75 சதவிகிதத்திற்கு மேல் செறிவூட்டப்படாதவையே.

இயற்கையில் கிடைக்கும் கிராபைட்டை மூன்று வகையாகப் பிரிக்கலாம்; முறையே படிக உருவம் உடையவை, படிக உருவம் அற்றவை மற்றும் நரம்புக் கொடி போன்று அமைப்புடையவை. இந்தியாவில் கிராபைட் கேரளம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஒரிஸா, பீகாரில் படிவங்களாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் கிடைக்கும் கிராபைட் பழம்பாறைகளில் செதில் செதிலாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய கிராபைட் படிவம் சிவகங்கை வட்டத்தில் 1970-ஆம் ஆண்டு வாக்கில் கண்டுபிடிக்கப்பட்டது. இப்படிவம் சிவகங்கையிலிருந்து மேலூர் செல்லும் சாலையின் 7-வது கி.மீட்டரிலிருந்து மேற்கு நோக்கி 23 கி.மீட்டர் தொலைவு வரை 200 மீட்டர் அகலம் கொண்டவை. மேலும் இது பூமியின் மேற்பரப்பிலிருந்து 100 மீட்டர் ஆழத்திலும் தொடர்ந்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய கிராபைட் படிவங்களில் பொதுவாக 14 சதவிகிதம் நிலையான கரிச்சத்து இருக்கும். பல, நில ஆய்வுகளின் படி முதல் 5 கி. மீட்டரில் 15 மீட்டர் ஆழம் வரை -ள்ள படிவங்களில் நிலையான கரிச்சத்துள்ள கிராபைட் கனிம இருப்பு சுமார் 2.5 இலட்சம் டன் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.





**தமிழ்நாடு கனிம நிறுவனத்தில், தமிழக அரசின் இலாபப் பங்குத் தொகை ரூ.1,31,15,000-க்கான காசோலையை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஏ.என். தியானேஸ்வரன், இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார் (7.12.'92).**

டாமின் முதல் 5 கி.மீட்டர் வரை அமைந்துள்ள படிவங்களைத் தோண்டியெடுக்கக் குத்தகை உரிமம் பெற்றுள்ளது. இந்தக் குத்தகை உரிமை, புதுப்பட்டி, செந்திஉடைய நாதபுரம், குமாரப்பட்டிக் கிராம எல்லைக்குட்பட்டது. இதற்காக டாமின் 900 ஏக்கர் நிலப்பகுதியைக் கையகப்படுத்தியுள்ளது. சுரங்கப் பணி தொடங்குவதற்கு முன்னோடியாக 250 மீட்டர் நீளம், 150 மீட்டர் அகலப் பகுதியில் உள்ள கிராபைட் படிவங்களின் தன்மை அறியப்பட்டது. மேலும், விரைவில் இது கிழக்கு மேற்காக விரிவுப்படுத்தப்பட்டு ஒரு நாளைக்கு 200 டன் கிராபைட் படிவங்கள் உற்பத்தி செய்வதற்கான நடைமுறைகளைச் செயல்படுத்தும்.

கிராபைட் கனிமம் பல இயற்பியல் பண்புகள் கொண்டது. இதனுடைய மிருதுவான தன்மை உராய்வுத் தடுப்பானாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிராபைட் வேதியியல் முறையில் எந்த ஒரு நிலையிலும் மற்றவற்றோடு சேர்ந்து கூட்டுப் பொருளோ அல்லது கலவைப் பொருளோ உண்டாகாது. தன் தனித்தன்மையை எப்போதும் நிலை நிறுத்தி இருக்கும். ஆதலால் கிராபைட் இரும்பு அல்லாத உலோகங்களை உருக்குவதற்காக மூசைகள் தயாரிக்கப் பயன்படுகிறது. இதன் இயற்பியல் பண்புகளினால் கிராபைட்டை இரும்பு மற்றும் எஃகு உருக்கும் ஆலைகளில் பயன்படுத்தப்படும் உலைக்கற்கள் தயாரிக்கப் பயன்படுகிறது. கிராபைட் ஒரு சிறந்த மின்கடத்தி, ஆதலால் இது எலக்ரோடுகள் (Electrodes) மற்றும் மின்கலங்கள் (Electric batteries) தயாரிக்கப் பயன்படுகிறது. மேலும் வாகனங்களை நிறுத்தப் பயன்படும் வேகத்தடுப்புகளிலும் (Brake lining) பென்சில் மற்றும் வண்ணப்பூச்சு (Paint) தயாரிக்கவும் பயன்படுகிறது.

கிராபைட் சார்ந்த பொருள்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கிராபைட்டில் நிலையான கரிச்சத்து மிக அதிகமாக இருக்க வேண்டும். இப்படி நிலையான கரிச்சத்தை உயர்த்துவதற்குக் கிராபைட் படிவங்களில் இருக்கும் கிராபைட் அல்லாத கனிமங்கள் நீக்கப்பட வேண்டும். ஆய்வுக்கூடங்களில் செய்யப்பட்ட சோதனைகள் மூலமாக கிராபைட் படிவங்களில் உள்ள நிலையான கரிச்சத்தை உயர்த்த முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

கிராபைட் படிவங்களில் உள்ள நிலையான கிராபைட்டை உயர்த்துவதற்கு அந்த 3 படிவங்கள் தூளாக்கப்பட்டு நீரில் கடைய வேண்டும். அந்த நீரில் சில துளிகள் பைன் எண்ணெய் சேர்த்து நீரைக் கடைந்தால் அதிக நுரை உண்டாகும். இத்தகைய நுரைகளில் கிராபைட் செதில்கள் நீரின் மேல் பரப்பிற்கு எடுத்துச் செல்லப்படும். கிராபைட்டுடன் படிவங்களில் சேர்ந்திருக்கும் குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பர் மற்றும் பல கனிமங்கள் நீரின் அடிப்பகுதியில் தங்கிவிடும். மேலே மிதக்கும் கிராபைட் செதில்களை அடிக்கடி மேல்புறமாக நீக்கி சிலதடவை அது சுத்தப்படுத்தப்பட வேண்டும். இதனால் சுத்தமான கிராபைட் மற்ற கனிமங்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. இத்தகைய செறிவூட்டப்பட்ட கிராபைட்டின் கரிச்சத்து 96 சதவிகிதத்துக்கு மேல் இருக்கும். இத்தகைய உயர்ரக கிராபைட் தான்



# எழுத்தாளர்களின் கடமை

"எழுத்தாளர்கள் என்றால் எழுத்தை ஆள் பவர்கள் என்று கருதுவதால் அந்த எழுத்துக்கு அவர்கள் உரிமையுள்ளவர்கள்.

எழுத்துக்கள் என்பதில் பலவேறு வகை இருக்கின்றன.

பிறரைச் சிந்திக்க வைக்கிற மாதிரி எழுதுவது ஒரு வகை.

பிறரைப் புண்படுத்தாமல் எழுதுவது ஒரு வகை.

பிறரைச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைப்பது ஒருவகை.

அப்படிச் சிந்திக்க மறுப்பவர்களைச் சந்திக்கு இழுப்பது என்பது ஒரு வகை.

எழுத்தாளர்களின் திறமை என்பது காலப் போக்கில் மாறுவது என்றாலும் அந்த எழுத்தாளர் களின் எழுத்துக்கள் எதிர்காலச் சந்ததிகளின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்றவைகள்.

சாதி, பணம் பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்கள் எழுத்துதான் இந்த நாட்டை உருவாக்கிடும்.

உங்களுக்கென்று குடும்பம் இருந்தாலும், அந்தப் பிரச்சினைதான் இங்கும் எதிரொலிக்கிறது என்பதை நினைவில் வைத்து உங்கள் கடமை களைச் செய்யுங்கள்.

இந்த நாட்டின் பண்பாட்டை யாரும் தகர்க்க முடியாத அளவுக்கு உங்கள் எழுத்துக்கள் பயன் பட வேண்டும்.

பல்லாண்டு எழுத்துச் சேவையாற்றிடப் பெற் றெடுத்த என் அன்னையை இறைஞ்சுகின்றேன்.

- டாக்டர் எம்.ஜி.ஆர்.

பல தொழில் நுட்பமிக்க பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

டாமின் தற்பொழுது சுமார் 22 கோடி முதலீட்டில் கிராபைட் மேம் பாட்டுத் தொழிற்சாலை ஒன்றை சிவகங்கையில் நிறுவி வருகிறது. இத் தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 200 டன் சுரங்கத்திலிருந்து வெட் டப்பட்டு வரும் 14 சதவிகித கரிச் சத்து கொண்ட கிராபைட் படி வத்தை மேம்படுத்தி 96 சதவிகித கரிச்சத்துள்ள செறிவூட்டப்பட்ட கிராபைட் உற்பத்தி செய்ய முடியும். இத்தகைய மேம்படுத்தப்பட்ட கிரா பைட்டிற்கு உலக அளவில் பெரும் தேவை உள்ளது.

உலகச் சந்தையில் இதுபோன்ற கிராபைட்டை மடகாஸ்கர், ஜெர்மனி, பிரேஸில் போன்ற நாடுகள் விற்பனை செய்து வருகின்றன. செதில் வடிவமான கிராபைட் ஒரு ஆண்டிற்குச் சுமார் 60,000 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. தற் பொழுது உலகத்திலுள்ள கிராபைட் சார்புடைய தொழிற்சாலைகள் தங்களது உற்பத்தித் திறனை அதி கரித்துக் கொண்டு வருவதாலும், புதுப்புது கிராபைட் சார்ந்த பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருவதாலும் செதில் வகையான கிராபைட்டிற்கு உலகச் சந்தையில் பெரும் தேவை உள்ளது. தற் பொழுது டாமின் உத்தேசித்துள்ள கிராபைட் மேம்பாட்டுத் தொழிற் சாலை ஆண்டிற்கு 9,000 டன் செறிவூட்டப்பட்ட கிராபைட் உற் பத்தி செய்யும். இந்த உற்பத்தி யானது உலகத்தில் தொழில்துறை யில் முன்னேறியுள்ள நாடுகளின் தேவைகளையும் மற்றும் நம்நாட்டுக் கிராபைட் தேவையையும் ஓரளவு பூர்த்தி செய்யும்.

தற்பொழுது சிவகங்கை கிரா பைட்டைப் பயன்படுத்தி கிராபைட் சார்ந்த தொழில்களைத் தொடங்கு வதற்குச் சரியான தருணமாகும். இத்தகைய தொழில்களில் ரூபாய் 200 கோடியிலிருந்து ரூபாய் 800 கோடி வரை முதலீட்டில் தொடங்க வழிவகை உள்ளது. டாமின் தொழில் நுட்பமிக்க ஏழு தொழில்களை இனம் கண்டுள்ளது. அவை முறையே:

சிலிகான் கார்பைடு மூசைகள் - இவை இரும்பு அல்லாத உலோகங் களை உருக்குவதற்குப் பயன்படும்.

மேக் கார்பன் செவ்வகக் கற்கள்- இவை இரும்பு அல்லாத எஃகுத் தொழிற்சாலை உலைக்கற்கள் செய்யப் பயன்படும்.

கார்பன் தூரிகை - இவை மின்சக்தி உற்பத்தி செய்யும் டர்போ ஆல்டர்நேட்டர்ஸில் பயன்படுத்தப் படுகிறது.

விரிவாக்கப்பட்ட கிராபைட் - இது ஆராய்ச்சிக்கான வானில் செலுத்தப்படும் ராக்கெட்டுகளில் பயன்படுத்தப்படுகிறது.

கிராபைட் உராய்வுத் தடுப்பான்- இது எஃகுத் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்களிலும், பளு தூக்கிகளிலும் மற்றும் வானில் செலுத்தப்படும் ராக்கெட்டுகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மின்கலன்கள் - இவை வீடு களிலும் தொழிற்சாலைகளிலும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

வாகனங்களில் உள்ள வேகத் தடைச் சாதனங்கள் வேகமாகச் செல்லும் ரயில் வண்டிகளிலும், பந்தயக் கார்களிலும், ஆகாய விமானங்களிலும் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

உலகப் புகழ் பெற்ற நிறுவனத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கனிமப் பதப்படுத்தும் தொழிற் சாலைக்குத் தேவையான கனிமப் பொருட்களை வெட்டியெடுக்கும் பணி 21.10.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. கிராஃ பைட்டை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் வந்துவிட்ட காரணத்தால், 21-ம் நூற்றாண்டு உதயமாவதற்கு முன்பே சிவகங்கை இந்தியாவின் தொழில் வளம்மிக்க தலமாக விளங்கும் என்பதில் ஐய மில்லை.

# தரணி போற்ற வாழ்ந்திடலாம்!

—கவிஞர் சமதர்மன்—

கொஞ்சி மகிழும் குழந்தைகளே
கூடி ஆடிப் பழகிநின்றால்
பஞ்ச பூதம் நம்மிடமே
பணிந்தே வாழ்வில் இருந்திடுமே!

நிலத்தைப் போல வளமையென
நிதமும் உடலை வளர்த்திடலாம்!
நலத்தைக் கூட்டும் நீரெனவாய்
நாமும் பிறர்க்கே உதவிடலாம்!

உருவ மில்லாக் காற்றினைப்போல்
ஊரில் நாமும் உழைத்திடலாம்!
நெருப்பைப் போல ஒளியேந்தி
நேர்த்தி யாக இருந்திடலாம்!

வானம் போல அகன்றிருக்கும்
மனத்தை வளர்த்துக் கொண்டிடலாம்!
தான மிக்க இச்செயலால்
தரணி போற்ற வாழ்ந்திடலாம்!



## தொலைக்காட்சி





முதன் முதலாக தொலைக்காட்சிக் கொள்கை 1884-ஆம் ஆண்டில்தான் வெளியிடப்பட்டது. வெளியிட்டவர் பெயர் நீப்கோல்.

தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் மார்கோனி. இவர் தொலைபேசியில் பேசுகிறவரையும், நிகழ்ச்சிகளையும் காட்ட முடியும் என்று 1915-இல் கூறினார்.

1923-இல் சோலிகன் என்பவரால் ஒளிபரப்பும் குழாய் கண்டுபிடிக்கப்பட்டது.

1925-இல் சின்கின்க என்ற அமெரிக்கர் முதன் முதலாக ஒளிபரப்பிக் காட்டினார்.

1926-சனவரி 27-இல் பேடு என்ற ஆங்கில அறிவியலார் ஒரறையிலிருந்து இன்னொரு அறைக்கு ஒளிப்பரப்பினார்.

1927-இல் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்-வாசிங்டன் இடையில் ஒளிபரப்பு நடந்தது.

1928-இல் முதன் முதலாக தொலைக் காட்சிப் பெட்டி விற்பனைக்கு வந்தது. இதுவும் அமெரிக்காவில்தான்.

பொது மக்களைப் பொறுத்த வரையில் ஒழுங்கான ஒளிபரப்பு 1936 நவம்பர் 2-இல் தான் ஆரம்பமானது. இது இங்கிலாந்திலுள்ள இலண்டனில் இடம் பெற்றது. இந்தியாவில் டெல்லி ஒளிபரப்பு 1954 செப்டம்பர் 15-இல் தான் ஆரம்பிக்கப் பட்டது.

சென்னையில் 1974-இல் தான் ஒலி பரப்பு தொடங்கியது. ஆனால் முதன் முதலில் தமிழ் மொழியில் ஒளிபரப்பானது சிங்கப்பூரில்தான். இது 1963-ஆம் ஆண்டில் நடைபெற்றது.

## தஞ்சையில் ஒரு அற்புதக் கருவூலம்!



தஞ்சை நகரில் அமைந்துள்ள சரபோஜி மகாராஜா சரஸ்வதி மகால் நூல் நிலையம் ஒரு அற்புதக் கருவூலமாகும்.

நாயக்கர்-மராட்டிய வம்சத்தவரால் போற்றி வளர்க்கப்பட்ட இந்த நூல் நிலையத்தில், கலை-கலாச்சாரம்-இலக்கியம் குறித்த அரிய சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் 44,777 உள்ளன. சமஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலும், பாரசீக மொழியில் சிலவும் உள்ளன. இதில் சமஸ்கிருதத்தில் உள்ளவையே அதிகம் - 37,499. நாகரி, கிரந்தம், தேவநாகரி, நந்தநாகரி போன்ற பல்வேறு லிபிகளில் கையெழுத்துப் பிரதிகள் எழுதப் பட்டுள்ளன.

பல்வேறு ஐரோப்பிய மொழி களில் 1832-ஆம் ஆண்டிற்கு முன்னர் (மகாராஜா சரபோஜி காலத்தில்) பிரிட்டனில் அச்சாகிய 4,500 நூல்களும் இங்கு உள்ளன.

1986 ஜூலையிலிருந்து பதிவு பெற்ற சொசைட்டியாக இது செயல் பட்டு வருகிறது. மத்திய அரசின் கலாச்சாரத் துறைப் பிரதிநிதிகளும், தமிழக அரசின் பிரதிநிதிகளும், வல்லுநர்களும் இதில் உறுப்பினராக உள்ளனர்.

நூல் நிலையப் பராமரிப்பிற்கும் செயல்பாட்டிற்கும் தமிழக அரசு பொறுப்பேற்றுள்ளது. நூல் நிலையத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு நிதியுதவி புரிகிறது.

# பெரியார் மாவட்டத்தில் அரசு ஆற்றிவரும் நலத்திட்டப் பணிகள்

ரா. கண்ணன், இ.ஆ.ப.,
பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர்



பெரியார் மாவட்டத்திற்குட்பட்ட 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் 1992-93-ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 10,830 நபர்களுக்கு ரூ.270.50 இலட்சம் மானியமாக வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இதில் 18.11.92 தேதி வரை 5,734 நபர்களுக்கு ரூ.128.39 இலட்சம் மானியம் அனுமதிக்கப்பட்டு உள்ளது.

### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், தொகுப்பு வீடுகள், சத்துணவு மையம், பள்ளிக் கட்டடங்கள், மெட்டல் சாலைகள், சிறுபாசனக் குளங்கள், சமூகக் காடுகள், ஊராட்சிப் பணிகள், ஜீவன்தாரா கிணறுகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் போன்ற பணிகள் செயல் படுத்த ஊரக வளர்ச்சி இயக்குநர் அளித்த வரன்முறைக்குட்பட்டு, 1992-93-ஆம் ஆண்டு உத்தேசத் திட்டம் ரூ.670.803 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு எடுத்துக் கொள்ளப் பட்டு, 1.4.92-இல் நிலுவையிலிருந் பணிகளுக்கும் நடப்பாண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட பணிகளுக்குமாகச் சேர்த்து மொத்தம் ரூ.249.64 இலட்சம் அக்டோபர் 1992 திங்கள் வரை செல விடப்பட்டுள்ளது. 7.500 இலட்ச மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஊராட்சிப் பணிகள் தலைப்பில் 27 பேரூராட்சிகளில் 34 கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூ.13.14 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. ரூ.11.990 இலட்சம் நிதி விடுவிக்கப் பட்டுள்ளது.

### சமூகக் காடுகள் திட்டம்

353.50 எக்டேரில் 4.918 இலட்சம் செடிகள் நடப்பட்டுள்ளன. தற்பொழுது சாதகமான பருவ நிலையை முன்னிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இத்தலைப்பில் நாளது வரை ரூ.13.74 இலட்சம் செலவு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

### சாண எரிவாயுத் திட்டம்

1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு, 1,100 நிர்ணயம் செய்யப்பட்டது. நாளது வரையில் 181 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

### டிரைசம் பயிற்சி

1992-93-ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 266 நபர்களுக்கு ரூ.20.11 இலட்சம் செலவில் 10.8.92 முதல் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. 2-வது கட்டமாக 536 நபர்களுக்கு 2.11.92 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 85 பேருக்கு 3-வது கட்டத்தில் 1.12.92 முதல் பயிற்சிகள் தொடங்கப் படவுள்ளன.

### குடும்ப அட்டை

குடும்ப அட்டைகள் இல்லாத 1,466 குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் அக்டோபர் 1992 திங்களில் 1,478 போலிக் குடும்ப அட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளது.

### ஆதிதிராவிடர் நலத்துறை

ஆதிதிராவிடர்களுக்கு மாடுகள் வாங்க ஒதுக்கப்பட்ட ரூ.24,000 16 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கெனக் குடிநீர்க் கிணறுகள் வெட்ட ரூ.90,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.53,751 செலவில் 6 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப் பட்ட ரூ.7,500-இல் ஒரு கிணறு வெட் டப்பட்டுள்ளது. மலைவாழ் பழங்குடி யினருக்கு ரூ.25,000 செலவில் 4 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க 4,250 பட்டாவுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டதில், ரூ.16 இலட்சம் செலவில் 1,486 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங் கப்பட்டுள்ளன.

பாதை மற்றும் மயான வசதிக்கென ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டதில் 25 இனங்களுக்கென ரூ.95 ஆயிரம் செலவு செய்யப்பட்டு, முடிக்கப் பட்டுள்ளது. பழங்குடியினருக்குப் பாதை வசதி செய்ய ரூ.40,000 அரசு ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.17,700 செலவில், 44 இனங்கள் முடிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியப் பங்குத் தொகைக் கென ரூ.10 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப் பட்டதில், ரூ.7,500 செலவிடப்பட்டு உள்ளது.



★ ஞானமும், பக்தியும் அனைவருக்கும் உரித்தான பெருஞ் செல்வம்.

★ கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது. சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது.

★ ஒழுக்கத்துடனும், நாணயத்துடனும் ஒவ்வொருவரும் நடந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மை விளையும்.

★ நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால், மக்கள் அற வழியில் நிற்கவேண்டும்.

**கல்வி உதவித் தொகை**

ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கென ஒதுக்கப்பட்ட ரூ.3,50,000-இல், 7,242 மாணவர்களுக்கு ரூ.1,50,681 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகைக்காக ஒதுக்கப்பட்ட ரூ.85,000-இல் 170 மாணவர்களுக்கு ரூ.95,000 வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கான மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகையாக ரூ.25,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 1,907 மாணவர்களுக்கு ரூ.15,73,775 செலவிடப்பட்டுள்ளது. அட்ஹாக் மெட்ரிக் கல்வி உதவித்தொகையான ரூ.48,000 ஒதுக்கீட்டில், 160 மாணவர்களுக்கு ரூ.48,000 செலவு செய்யப்பட்டது.

சிறப்பு ப்ரிமெட்ரிக் உதவித்தொகையாகச் சுகாதாரக் குறைவான தொழில் புரிவோர் குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.2,50,000-இல் 55 பேர்களுக்கு ரூ.1,12,550 செலவிடப்பட்டது. பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 99 மாணவர்களுக்கு ரூ.35,972 வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்க ரூ.80,000 ஒதுக்கப்பட்டதில், 1,544 மாணவர்களுக்கு ரூ.63,369 செலவு செய்யப்பட்டுவிட்டது. ரூ.4,31,170 செலவில் 4,681 ஆதி திராவிட மாணவர்களுக்கு 9 மற்றும் 10-ஆம் வகுப்பு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்க ரூ.46,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.12,736 செலவில் 425 ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

சீருடைகள் வழங்க ரூ.3,10,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 2,364 மாணவ மாணவியர்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவுத் துறை**

பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள் 483-ம் மாவட்ட அளவிலான சங்கங்கள் 4-ம் உட்பட மொத்தம் பெரியார் மாவட்டத்தில் 487 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

1992-93-ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களுக்கான குறியீட்டில் 19,249 நபர்கள் ரூ.1481.80 கடன் பெற்று பயன்பெற்றுள்ளனர். மத்திய காலக் கடன்களுக்கு ரூ.350 இலட்சம் குறியீட்டில், அக்டோபர் 1992 திங்கள் வரை ரூ.59.48 இலட்சம் 1,034 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நலிவடைந்த பிரிவினர்களுக்கான குறுகிய காலக் கடனாக உள்ள ரூ.1,190 இலட்சம் குறியீட்டில் அக்டோபர் 1992 திங்கள் முடிய 14,295 நபர்கள் ரூ.1021.01 இலட்சம் கடன் பெற்று பயன்பெற்றுள்ளர். மத்திய காலக் கடனாக ரூ.245 இலட்சம் குறியீட்டளவில், 942 நபர்கள் ரூ.52.47 இலட்சம் கடன் பெற்று பயனடைந்துள்ளனர். நீண்ட காலக் கடனாக அக்டோபர் 1992 திங்கள் வரை ரூ.95.73 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தொடக்கக் கூட்டுறவு வங்கி மூலம் நகையீட்டுக் கடனாக ரூ.2,230.90 இலட்சம் 28,654 நபர்களுக்கும், மத்திய வங்கி மூலம் ரூ.596.34 இலட்சம் 7,770 நபர்களுக்கும், நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.901.78 இலட்சம் 15,780 நபர்களுக்கும் 1992 அக்டோபர் வரை வழங்கப்பட்டு உள்ளது.

மத்திய வங்கி மூலம் சிறுதொழில் கடனாக ரூ.15.55 இலட்சமும், நகர வங்கிகள் மூலம் ரூ.64.06 இலட்சமும் அக்டோபர் 1992 திங்கள் வரை வழங்கப்பட்டுள்ளது.

மலைவாழ் மக்களுக்கென ஒரு பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் செயல் பட்டு வருகின்றது. 1992-93-ஆம் ஆண்டிற்குக் கடன் வழங்கும் திட்டத்தில் ரூ.4.70 இலட்சம் குறியீட்டில், 1992 அக்டோபர் வரை ரூ.1.82 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. விவசாயப் பொருட்கள் விற்பனையின் ரூ.2 இலட்சம் குறியீட்டில் 0.45 இலட்சம் ரூபாய் 1992 அக்டோபர் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. சிறுவனப் பொருட்கள் சேகரத்திற்கு ரூ.24 நிர்ணயித்ததில், ரூ.10.27 வரை சேகரிக்கப் பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கு ரூ.8.50 நிர்ணயிக்கப்பட்டதில், ரூ.4.23 வரை வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்டத் தொழில் மையம்**

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நபர்களுக்குக் கடன் உதவி வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 1992 வரை 468 நபர்களுக்கு 99.60 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்து 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டுள்ள ஆண்/பெண்களுக்குக் குடும்ப வருமானம் ஆண்டு ரூ.10,000-க்கு மிகாமல் இருந்தால் சொந்தமாகத் தொழில் அமைத்து வாழ்க்கையில் முன்னேற வாய்ப்பு உள்ளது. ஆகவே, தகுதி வாய்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் முழு விவரங்களுடன் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், ஈரோடு-2 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். இதில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவர்களுக்கு மொத்த ஆண்டு குறியீட்டில் 30 சதவிகிதம் கடன் வழங்கப்படும்.



### தந்தை பெரியாரின் புரட்சி மொழிகள்

★ நல்ல குடும்பம் என்பது வரவுக்கு மிஞ்சிய செலவு செய்யாமல் இருப்பதாகும். தமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அழைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குடும்பம் தான் கண்ணியமான குடும்பம்.

★ யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதனை அப்படியே ஏற்றுக் கொள்வது என்றால், மனிதன் வளர்ச்சி அடைய மாட்டான்.

★ சேவை என்பது மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்.

★ மனிதனுக்கு மனிதன் சமம்; ஒருவரை ஒருவர் சுரண்டக் கூடாது. ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்; ஒருவரை ஒருவர் வருந்தக் கூடாது.

**குடும்ப நலத்துறை**

அக்டோபர் 1992 1,267 தகுதி வாய்ந்த தம்பதியர்கள் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பயன் அடைந்துள்ளனர். இது இம் மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள குறியீடான 13,000-இல் 9.7 சதவிகிதச் சாதனையாகும். 814 தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டு உள்ளது.

**குடிநீர் வடிகால் வாரியம்**

கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 276 கையிறைப்பான் திட்டங்கள் மற்றும் 53 மின் இணைப்பான் திட்டங்கள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், ரூ.13.45 இலட்சம் செலவில் 63 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

குடிநீர் ஆதாரமில்லாத குடியிருப்புகளுக்கான திட்டத்தின் கீழ், ரூ.46.94 இலட்சம் செலவில் 128 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறுத் திட்டத்தின் கீழ், ரூ.20.49 இலட்சம் செலவில் 75 குடியிருப்புகளுக்கு மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**ரூ.54.6 இலட்சம் உர மானியம்**

பெரியார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இதுவரை ரூ.47.2 இலட்சமும், 'தாய்' எனப்படும் தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் மூலம் ரூ.6 இலட்சமும், என்கோபெட் எனப்படும் தமிழ்நாடு வேளாண் பொறியியல் கூட்டுறவுப் பணி மையம் மூலம் ரூ.1.5 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.54.6 இலட்சம் உர மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

நிலக்கடலை மற்றும் பயறுவகைப் பயிர்களுக்கு நீர் தூவும் கருவி அமைக்க இதுவரை 80 விவசாயிகளுக்கு மானிய விலையில் கருவிகள் வழங்கப்பட்டு உள்ளது. இதற்கென ரூ.9.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் 11 விவசாயிகளுக்கு வழங்கப் படவுள்ளது.

நெல் சாகுபடியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நடப்பாண்டில் 550 விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும், 45 விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளும் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் ரூ.2,000 நிதி உதவி வழங்கப்படும். இந்நிதியைப் பெறப் பெற்றோர்களின் வயது, அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் நேரத்தில் 35-க்குள் இருக்க வேண்டும். தம்பதியருக்கு ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருத்தல் வேண்டும். ஆண் குழந்தைகள் இருக்கக் கூடாது. இரண்டு பெண் குழந்தைகள் இருப்பின் இரண்டாவது குழந்தைக்கு மட்டுமே வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயனடையும் பெண் குழந்தை 3 வயதிற்குட்பட்டு இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.6,400-க்குள் இருத்தல் வேண்டும்.

முதல் பிறந்த நாளன்று ரூ.250 நிதியுதவியும், பள்ளியில் சேர்க்கும் சமயம் ரூ.250 நிதியுதவியும், 6-ஆம் வகுப்பில் சேரும் சமயம் ரூ.500-ம், 9-ஆம் வகுப்பு முதல் ப்ளஸ் 2 வரை 4 ஆண்டுகளுக்கு ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும். பெண்ணிற்கு 20 வயது முடிந்தவுடன் திருமணத்திற்காகவோ அல்லது மேல் படிப்பிற்காகவோ ரூ.10 ஆயிரம் தொகையாக வழங்கப் படும். 1.10.92-க்குப் பின்பு குடும்ப நலத் திட்டத்தில் பங்கேற்ற தம்பதியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியானவர்.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

1992 அக்டோபர் திங்களில் 4 நபர்களுக்குச் சிறுதொழில் தொடங்க ரூ.172.65 இலட்சங்கள் கடன் அனுமதி அளித்துள்ளது. இதுவரை 12 நபர்களுக்குச் சிறுதொழில் மற்றும் வாகனக் கடன் திட்டத்தின் கீழ் ரூ.309.77 இலட்சங்கள் கடன் அனுமதி அளித்து உள்ளது.

1992 அக்டோபர் திங்களில் 9 நபர்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.53.20 இலட்சங்கள் கடன் பட்டுவாடா செய்துள்ளது. இத்திங்கள் முடிய 98 நபர்களுக்கு ரூ.481.88 இலட்சங்கள் கடன் பட்டுவாடா செய்துள்ளது.

இக்கழகம் 1992 அக்டோபர் திங்களில் ரூ.43.48 இலட்சங்கள் கடன் வசூல் செய்துள்ளது. இத்திங்கள் முடிய ரூ.253.65 இலட்சங்கள் கடன் வசூல் பெரியார் மாவட்டத்தில் செய்துள்ளது.

# உழவர் உயர்வுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை



என். இராமலிங்கம்
உதவி செயற்பொறியாளர்
(வே.பொ.)
(உழுவை வாடகைத் திட்டம்)
தஞ்சாவூர்.

'உழுவார் உலகத்துக்காணி' என்பது குறள், உணவளிக்கும் உழவர் தொழிலின் சிறப்பை உணர்த்தவே இவ்வாறு கூறினார் வள்ளுவர். பயிர்த் தொழில் சிறந்து நாட்டில் விளைச்சல் பெருகிடப் பாடுவடுவதே வேளாண்மைப் பொறியியல் துறையின் தலையாய கடமையாகும்.

**நிலமும், நீரும்,**

நிலமும் நீரும் வேளாண்மைக்கு இரு கண்கள். இவற்றில் நிலத்தைப் பண்படுத்தி உழவியல் முறைகளின் மூலம் பயிர் செய்யத்தக்கதாய் மாற்றுவதும், நிலத்தடி நீர்முதல் நிலமட்ட நீர் வரை கிடைக்கக்கூடிய நீரை வேளாண்மைக்குச் சிக்கனமாய்ப் பயன்படுத்திட சீரிய வழிகளைக் கண்டுபிடித்து அமோக விளைச்சலுக்கு வழிகோலுவதும் வேளாண்மைப் பொறியியல் துறையின் பணிகளாகும்.

**முக்கியப் பணிகள்**

வறட்சியாலும், வெள்ளத்தாலும் நாடு பாதிக்கப்படும்போது உழவர் துயர் துடைக்க வேளாண்மைப் பொறியியல் துறை தொண்டாற்றுகிறது. வெள்ளத்தால் மண் மேடிட்ட நிலங்களில் மூடிய மண்ணை வெளியேற்றவும், கரை உடைபட்ட கால்வாய்களை, ஏரிகளைச் சீரமைத்தும், நாட்டின் வறட்சி போக்கி விளைச்சல் பெருகிட நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து பருவமழை, பொய்த்துப்போன காலங்களிலும் நிலையான பாசன வசதியினை ஏற்படுத்தித் தரவும் திட்டமிட்டுப் பணியாற்றி நாட்டின் பசுமைப் புரட்சிக்கு வழி கோலுகிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

பருவ மழை பொய்த்து காவிரியில் நீர்வரத்துக் குறைந்ததனால் பயிரிட்ட தாளடி பிழைக்குமா? எனும் சந்தேகம் நாளுக்கு நாள் வலுத்து, சோர்ந்து போயிருந்த தஞ்சை உழவர் பெருமக்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி துவளாதீர்! தாளடியினைக் காப்பாற்றியே தீருவோம்! கவலை வேண்டாம்! எனச் சொல்லி தமிழக அரசின் 5,000 வடிமுனைக் குழாய்க் கிணற்றுத் திட்ட விண்ணப்பத்தில் கையொப்பம் பெறுவது முதல் வடிமுனைக் குழாய்க் கிணறு இறக்கி பம்புசெட் நிறுவி வாடும் தாளடிப் பயிரினைக் காத்திட, போர்க்கால அடிப்படையில் மிகக் குறுகிய காலத்தில் பணியாற்றியதனால் தாளடியில் அமோக விளைச்சல் கண்டிடவும், உணவுப் பற்றாக்குறையினைக் குறைத்திடவும் பாடுபட்டுச் சாதனை படைத்தது வேளாண்மைப் பொறியியல் துறை.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் மூலம் 1,789 கசிவு நீர்க் குட்டைகள் அமைத்து, நிலத்தடி நீர்வளம் காத்திட வழிவகுத்து குழாய்க் கிணறுகள், கேணிகள் ஆகியவற்றில் பாசன வசதியினைப் பெருக்கிடத் திட்டமிட்டுச் செயலாற்றியது. காற்றரிப்பினால் விளைநிலங்கள் வீண் நிலங்களாக மாறுவதைத் தடுத்திட மதுரை, நெல்லை மாவட்டங்களில் காற்றுக்கு வேலியமைத்து விளைநிலங்கள் காத்திடத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

மானாவாரி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் சம உயர வரப்புகள், தடுப்பணைகள், அகலப் பாத்தி முறை போன்றவற்றால் மண், நீர்வளம் காத்து மகசூல் பெருக்கிடச் செயலாற்றுகிறது.

பாசன நீரின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறி சிக்கனமாய் நீர் பாய்ச்சி, சிறந்த நல்விளைச்சல் பெற பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், நதிப்பள்ளத்தாக்குத் திட்டங்கள் என வகுத்துப் பாசன நீரைப் பாங்காய்ப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற்றிட வழி வகுக் கப்பட்டுள்ளது.

பருவ மழைக் கோளாறினால் பாசனப் பகுதிகள் குறையாது காத்திடத் தெளிப்பு நீர்ப் பாசனம், சொட்டு நீர்ப் பாசனம் போன்றவற் றினைச் செயற்படுத்தி சற்றேறக் குறைய 1.5 கோடி ரூபாய் மானிய மாக விவசாயிகளுக்கு வழங்கி பாசன நீர்ப் பற்றாக்குறையினைச் சமாளித்து பயிர்வளம் காத்திடத் திட்டமிட்டுச் செயலாற்றியது. கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் உழவர் உயர்வுக்கான திட்டங்கள் பலதீட்டிச் செயற்பட்டு வருகிறது வேளாண்மைப் பொறி யியல் துறை.

**நிலம் ஏன் சமப்படுத்தப்படல் வேண்டும்?**

நிலம் சமமாய் இருந்தால்தான் பாய்ச்சுகின்ற நீரோ, இடுகின்ற உரமோ எல்லா இடங்களையும் சென்றடைந்து அதிக விளைச்சல் பெற வகை செய்யும். ஆகவே, பண்ணை வேலைகள் எளிதாய் அமைந்திட நிலம் சமமாய் இருத்தல் அவசியம். தவிர பருவத்தே பயிர் செய் என்பது பழமொழி. பயிர் செய்திட நிலத்தினை உழுது பயிர் நட ஏதுவாக்குதல் மிகவும் அவசியம். ஒரே நேரத்தில் பல இலட்சம் ஏக்கர்கள் பயிர் நடப் போதுமான உழவுக் கருவிகள் தேவை. ஆகவே, உழவர்களின் இவ்விரு தேவைகளை யும் பூர்த்திசெய்திட நிலச்சமன் செய்திட புல்டோசர்களும், உழவு செய்திட உழுவைகளும் வேளாண் மைப் பொறியியல் துறையின் மூலம் நியாயமான வாடகையில் வழங்கப் படுகின்றன,

**நிலத்தடிநீர் எடுத்து நிலத்தைப் பாசனம் செய்தல்**

நிலையான பாசன வசதிகளை ஏற்படுத்தித்தந்து உறுதியான விளைச் சலைப் பெற்றிட உழவர் பெருங்குடி மக்களுக்கு உதவிடும் வகையில் நிலத் தடிநீரை வெளிக் கொணர்ந்திட கைத்துளைக் கருவிகளும், இயந்திரத் துறைக் கருவிகளும், பாறைப் பகுதி களில் விரைவாய் குழாய்க் கிணறு இறக்கிட ஹாமர் துளைக் கருவி களும் இத்துறையின் மூலம் வாட கைக்கு வழங்கப்படுகிறது.

இதுமட்டுமல்லாது நிலத்தடிநீர் நிலைகளை அறிவியல் முறை மூலம் அறிந்து குழாய்க் கிணறு நிறுவிடத் தகுதியான, ஊற்றுள்ள இடத்தி னைத் தேர்வு செய்து தருவதன் மூலம் உழவர் பெருமக்களுக்கு ஏற் படக்கூடிய வீணான செலவினங் களைக் குறைத்திட இத்துறை உதவுகிறது. பாறைக் கிணறுகளை ஆழப்படுத்திடவும், அகழ் கிணற்றிற் குள் குழாய்க் கிணறு அமைத்திட வும், பக்க ஊற்றுக்களைக் கிணற்றுக் குள் சேர்த்திடப் பக்கவாட்டுக் குழாய்கள் அமைத்திடவும் வேளாண்மைப் பொறியியல் துறை உதவுகிறது.

**பாசன நீர்ப் பற்றாக்குறையைச் சமாளித்திட**

இருக்கின்ற பாசன நீர்ப் பற்றாக் குறையில் புதிய முறைகளைப் பின் பற்றி பயிரின் தேவைக்கேற்ப நீரைச் சிக்கனமாகவும், அதே நேரம் அதிகப் பரப்புப் பாசனம் பெறும் வகை யிலும் பயன்படுத்த வேண்டியது உழவர்களின் கடமையாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப் பாசனம் போன்ற முறைகளைச் செயற்படுத்திட உழவர் பெருமக் களை ஊக்கப்படுத்தி தேசியமய மாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடன் பெற இத்துறை உதவுகிறது. இப்பாசன முறை நிறுவிட ஏற்படும் செலவில் பாதியினை மானியமாக உழவர்களுக்கு வழங்கிடும் அரசுத் திட்டமானது வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயற்படுத்தப்படுகிறது.

**பாசன ஆறு மற்றும் வாய்க்கால்கள் சீரமைக்கும் பணி**

பாசன ஆறுகள் மண்மேடிட்டும், பாசன வாய்க்கால்களின் நெய்வேலி காட்டாமணிகள் வளர்ந்து பாசன நீரைத் தடுத்து உடைப்புகள் ஏற் படுத்தி பயிர் விளைச்சல் பாதிப் பினைத் தவிர்த்திட ஒவ்வொரு ஆண்டும் பொதுப் பணித்துறை யுடன் இணைந்து இது செயல்படு கிறது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் புல்டோ சர்கள் தருவிக்கப்பட்டு, பாசன ஆறு களைச் செப்பனிடுவதும், பாசன வாய்க்கால்களில் தூர் அகற்றிடவும் பாசன நீரைப் பாங்காகப் பயன் படுத்தி பயிர் விளைச்சலுக்குப் பாடுபடுகிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

1992-93-ஆம் ஆண்டில் ஏறத் தாழ 1.25 கோடி ரூபாய் செலவில் 60 புல்டோசர்களைக் கொண்டு பாசன ஆறுகளும், பாசன வாய்க் கால்களும் தூர் அகற்றப்பட்டுப் பாசன நீர் முழு அளவில் சென்று விவசாயிகள் பயனடையப் பாடு பட்டுள்ளது.

இப்பணிகள் சிறப்பைக் குறிப் பிட்டு சொல்லவேண்டுமெனில்,





## பறவை மனிதர்

எட்டு வயதுச் சிறுவன் ஒருவனுடைய கவணிலிருந்து புறப்பட்ட கல்லுக்கு இலக்காகி வினோத பறவை ஒன்று வீழ்ந்தது. அது என்ன பறவை என்பதைத் தெரிந்து கொள்ள அவன் பம்பாய் இயற்கை வரலாற்றுக் கழகம் சென்றான். அங்கு வித விதமான பறவைகளின் பதப்படுத்திய உருவங்களைக் கண்ட அவன், தானும் அதேபோல சேகரிக்க ஆர்வம் கொண்டான். அவன்தான் பின்னாட்களில் 'பறவை மனிதர்' என்ற சிறப்பைப் பெற்ற உலகப் புகழ் பெற்ற பறவை ஆராய்ச்சியாளர் டாக்டர் சலீம் அலி.

*1896* நவம்பர் *12*-ஆம் தேதி பம்பாய் நகரில் பிறந்தார் சலீம் மொய்ஸுதின் அப்துல் அலி. பத்ம பூஷன் *(1958)*, பத்ம விபூஷன் *(1976)* உள்பட பல தேசிய, சர்வதேச விருதுகள் இவரை அலங்கரித்துள்ளன. சுமார் பத்து நூல்களும், எண்ணற்ற கட்டுரைகளும் எழுதியுள்ளார். அருணாச்சலப் பிரதேசத்திலிருந்து அந்தமான் தீவுகள் வரை, இந்திய துணைக் கண்டத்தில் இவரது காலடி படாத இடமே இல்லை எனலாம்! பூடான், திபெத், ஆப்கானிஸ்தான், பர்மா ஆகிய அண்டை நாடுகளுக்கும் சென்று பறவை ஆராய்ச்சி செய்துள்ளார். இந்தியப் பறவை இனத்தைக் காப்பாற்றுவதற்கு இவர் அரிய சேவை புரிந்துள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன் இயற்கை எய்திய இவர், 'ஆராய்ச்சிக்கெனப் பறவைகளைக் கொல்வது கூட எனக்கு மிகவும் மன வேதனையைத் தருகிறது' என்று கூறியுள்ளார்.

---

கல்லணைத் தலைப்பில் கல்லணைக் கால்வாய் *3* அடி முதல் *4* அடி வரை மண்மேடிட்டு, கொள்ளளவு குறைந்ததனை அகற்றிட இத்துறையின் ஏழு புல்டோசர்கள் மண் மேட்டைக் கரையேற்றி மலைபோல் குவிந்ததனை மக்கள் வியப்போடு கண்டுகளித்தனர். காவிரிச் சீரமைப்புக் கோட்டத்தில் திருமலைராசன் ஆற்றினைச் செம்மைப்படுத்தி திருப்பமில்லாது அமைக்கும் பணி இன்றும் பலரால் போற்றப்பட்டுள்ளது. இதுபோன்று விவசாயிகளின் இன்னல்களை இத்துறை ஆற்றும் பணி மெச்சத் தக்கதாகும்.

### மானாவாரி நிலம் மேம்பட!

மானாவாரி நிலங்களின் மண் வளம் காத்து, மழை நீரைச் சேமித்து வேளாண்மை செய்திட சம உயர வரப்புகள், தடுப்பணைகள் நிறுவி மகசூல் பெருக்கிடவும், வேளாண்மைக்குப் பயனற்ற நிலங்களில் மரம் வளர்த்தல், கசிவுநீர்க் குட்டைகள், ஓடை அரிப்பினைத் தடுத்திடும் முறைகள் ஆகியவற்றினை மேற்கொண்டு நிலத்தடி நீர்வளம், மண் வளம் காப்பதோடு ஓடை அரிப்பிலிருந்து நில மீட்பும் இத்துறை மூலம் செயற்படுத்தப்படுகிறது.

### காற்றுக்கு ஏன் வேலி?

நெல்லை, சிதம்பரனார், மதுரை மாவட்டங்களில் காற்றரிப்பினால் விளை நிலங்கள் மண் அரிக்கப்படும் மண்மேடிட்டும் வீணாவதைத் தடுத்திட காற்றுக்கே வேலி அமைத்துத் தடுத்திட, வேளாண்மை செய்திட, வகை செய்யும் காற்றரிப்புத் தடுப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் எனும் பெயரில் மலைவாழ் பழங்குடி மக்கள் மேம்பாடடைய வேளாண்மை செய்திட உதவிடும் பொருட்டு நிலச் சமன்படுத்துதல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், தடுப்பணைகள் அமைத்தல் எனப் பல்வேறு பணிகளைச் செய்து மலைவாழ் மக்கள் சமுதாய நிலையினை உயர்த்திட இத்துறை பாடுபட்டு வருகிறது.

### நதிப் பள்ளத்தாக்கு வளம் பெற

மழைப் பிடிப்புப் பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுத்திடவும், நீர்வடி பகுதிகளில் வண்டல் படிவதைத் தடுத்திடவும், குந்தா-கீழ்ப் பவானி நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் தீட்டப்பட்டு வேளாண்மைப் பெருக்கத்திற்கு வகை செய்கிறது இத்துறை. இதேபோல் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அரிபள்ளத்தைத் தடுக்கவும், சிறு பாசன வசதிகளை அதிகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தி வருகிறது.

### பாசன நீர்ப் பங்கீடு பயனளிக்கும்

பாசன நீரைப் பங்கீடு முறையில் அளித்து கடைமடை உழவரும் பயன் பெற்று பாங்கான விளைச்சல் பெற்றிட வாரப்பந்தி எனும் முறைப் பாசனத் திட்டம் தஞ்சை, மதுரை மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு சீரிய விளைவிற்கு வழி வகுக்கிறது. விளைபொருள் வீணாவதைத் தடுத்திட, பண்ணைக் களங்கள் கட்டி உழவர் மனம் மகிழ உவப்பாகச் செயல்படுகிறது வேளாண்மைப் பொறியியல் துறை. வேளாண்மைப் பணியில்லாக் காலங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்திடவும், சமுதாய மேம்பாட்டிற்கும் திட்டமிடப்பட்ட ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் மூலம் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்து நிலத்தடி நீர்வளம் காத்திடவும், மழையினால் மண் அடித்துச் சென்று ஏரி, குளம் தூர் சேருவதைத் தடுத்திடவும் இத்துறை பாடுபடுகிறது.

### உழவர் உயர்வே குறிக்கோள்

இத்திட்டங்கள் அனைத்தும் உழவர் பெருமக்கள் உயர்வடைய ஏற்படுத்தப்பட்ட திட்டங்களே ஆகும். நிலமும் நீரும் உழவரின் இரு கண்கள். இவ்விரு கண்களைப் பாதுகாப்பதன் மூலம், நாட்டின் வளம் காத்து உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிட உழவர் உயர்ந்திட வழி வகுக்கிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 867
Licence No. TN/MS(



